# யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

# நம்பிக்கையே நம்மை உயர்த்தும்

## உளவியல் சஞ்சிகை

2012

# முன்னுரை

யா/வடமராட்சி இந்துமகளிர்கல்லூரி மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணரும் நோக்கோடு அவர்களின் சுயகற்றலை மேம்படுத்தும் தேடலின் அவசியம் உணர்த்தப்பட்டு கையெழுத்தச் சஞ்சிகையான “நம்பிக்கையே நம்மை உயர்த்தும்” என்னும் இவ் உளவியல் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

இச்சஞ்சிகை ஆக்கத்தினூடாக தரம் ஆறிலிருந்து, க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்கின்ற மாணவர்களின் உளரீதியான செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இச் சஞ்சிகையானது எமது மாணவர்களது ஓய்வுநேர வாசிப்பிற்கு மிகவும் உபயோகமானது. படங்கள், துணுக்குகள், துண்டுப்பிரசுரசுரங்கள், கவிதைகள், கட்டுரைகள் முதலான பலகோணங்களில் ஆக்கப்பட்டுள்ளது.

சவால்கள் நிறைந்த இவ்வுலகில் மனிதனை மனிதனாக வாழவழிகாட்டும் தன்நம்பிக்கை. விடாமுயற்சி, தோழமை முதலான படிப்பினைகளை மிகத்துல்லியமாகப் புடமிட்டுக்காட்டுவனவாக ஆக்கங்கள் அமைந்துள்ளன.

பாடவிதானசெயற்பாடுகளுடன் இணைபாடவிதான செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் அளிப்பதன்மூலமே ஆழுமையுள்ள ஒரு பூரணமனிதனை உருவாக்கமுடியும் என்றவகையில் எமதுபாடசாலை மாணவர்கள் வழிப்படுத்தப் படுவதையிட்டுப் பெருமையடைகின்றேன்.


திருமதி.தேவராணி நவரத்தினம்
அதிபர்
யா/வடமராட்சி இந்துமகளிர்கல்லூரி.

# பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி அவர்களின் வாழ்த்துரை


வளர்ந்துவரும் சமூகத்தின் ஏணிப்படிக்கற்களாக இருப்பவர்கள் மாணவர்கள். இவர்களை நற்பிரசையாக சமூகத்திற்கு ஈர்ந்தளிப்பதில் பாடசாலைகள் பெரும்பங்காற்றுகின்றன. அந்தவகையில் யா/வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி அதிபரின் வழிப்படுத்தலில் மாணவர்கள் கல்வியில் மாத்திரமன்றி இணைபாடவிதானச் செயற்பாதடுகளிலும் முன்நின்று உழைத்ததன் ஓர் அம்சமே “நம்பிக்கையே உயர்வுதரும்” என்ற கையெழுத்துச் சஞ்சிகையின் வெளிப்பாடாகும்.

மாணவர்களின் அறிவுத்தேடல்கள், உள்ளக் கிடைக்கைகள் யாவும் எழுத்துருப்பெற்று சஞ்சிகையாக வெளிவர பாடசாலை அதிபர் திருமதி தேவராணி நவரத்தினம் அவர்கள் அயராது உழைத்துள்ளார். மாணவரின் கல்வியை ஊக்குவிக்கும் அவரின் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என்று வாழ்த்தி எனது வாழ்த்துரையை நிறைவுசெய்கின்றேன்.

திரு.ச. ஸ்ரீராமச்சந்திரன்
கோட்டக்கல்வி அதிகாரி
பருத்தித்துறை.







# நல்வரவு





# உள்ளடக்கம்

* கட்டுரைகள்
* கவிதைகள்
* நுண்ப்பிரசாரங்கள்
* சித்திரம்

சவால்களை
வெற்றி
கொள்வோம்

# நம்பிக்கையே நம்மை உயர்த்தும்

நம்பிக்கையே வாழ்க்கையின் முதற்படி! முதலில் உங்களது இலட்சியத்தில் நம்பிக்கை வையுங்கள் நிச்சயம் இலட்சியம் வெல்லும்.

# நம்பிக்கையே நம்மை உயர்த்தும்

* நம்மை உயர்த்தும் நம்பிக்கை அது இருந்தால் நாம் எதையும் வெல்ல முடியும்.

* நாம் நினைத்ததை சாதிக்கலாம்.

உடல் வலிமையும் மன உறுதியும் நம்பிக்கை வர செய்யும்.

* விடா முயற்சி உடன் நம்பிக்கை இருந்தால் என்றும் நமக்கு வெற்றி தான்.

* வாழ்க்கையில் நாம் நிச்சயம் வெற்றியடைவோம் என்ற உறுதி மொழியை மனதில் பொறித்து நம்பிக்கையுடன் வாழ்ந்து நம்மை உயர்த்தி கொள்வோம்.



11 A


சகபாடிகளாய்
ஒன்றிணைவோம்!
சாதிப்போம்!

# நம்பிக்கை

அன்பார்ந்த மக்களே !


நம்பிக்கை வாழ்வின் வெற்றிப்படி

வாழ்வின் இரகசியம்
“தன்னம்பிக்கை”

யானைக்கு வேணும்
தும்பிக்கை

மனிதனுக்கு வேணும்
நம்பிக்கை

தோல்வி என்பது வெற்றியின் அடையாளம்
வெற்றி என்பது நம்பிக்கையின் அடையாளம்




xxx
(THE END)



# நம்பிக்கை

அன்பார்ந்த பிள்ளைகளே!

நம் வாழ்வினை உயர்த்தும் வெற்றிப்படி நம்பிக்கையே.


நேற்று என்பது உண்மையானவை!
இன்று என்பது உண்மை சொல்லை
நாளை என்பது நம் நம்பிக்கையே!

* மனிதனின் பலம் நம்பிக்கையே ஆகும்.

நம்பிக்கை = விடாமுயற்சி + உண்மை.

யானையின் பலம் தும்பிக்கை

மனிதனின் பலம் நம்பிக்கை






2012.09.27

நம்பிக்கை நிதியம்.

T.P :- 078 5585739


நம்பிக்கை
1
நம்பிக்கை
நம்மை
உயர்த்
தும்

# நம்பிக்கை நம்மை உயர்த்தும்

அன்று அதிகாலையில் சூரியன் தனது பொற்கதிர்களை வீசியெழுந்தபடி அடிவானிலே தோன்றுகின்ற அந்தப் பொழுதிலே கண்விழித்தெழுகின்றாள் நிலா. அந்தவேளையிலே அவளது வீட்டில் தொலைபேசிக்கு ஓர் அழைப்பு வருகிறது. உடனே அங்கு சென்ற நிலா தொலைபேசியை எடுத்ததும் அவளுக்கு ஓர் பரிதிய அதிர்ச்சி காத்திருந்தது! அந்த அழைப்பிலே அவளது பெரியதந்தையார் கூறுகின்றார். "பிள்ளை நிலா அப்பா வேலைக்கு சென்ற போது வீதிவேலைகளுக்காக வெட்டப்பட்ட பள்ளத்தில் தவறி விழுந்த போது அங்கு இருந்த கம்பிகள் வயிற்றிலும் கண்ணிலும் தைத்துவிட்டதால் அந்த இடத்திலே அதிகளவு இரத்தப் பெருக்கு ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுவிட்டார் நீ உடனே எங்களது வீட்டுக்குவா" என கூறினார். பாடசாலை செல்லத் தயாரான அவள் அக்கணமே முகம் கூட கழுவாமல் பெரிய தந்தை வீட்டை நோக்கிச் சென்றாள். அவளது தந்தையோ கூலி வேலை செய்பவர். தினமும் அவரது உழைப்பிலே தான் அவர்களது வாழ்க்கைப்பயணம் நடக்கிறது. அவளது தாயும் சுகவீனமானவர். அவர்களும் தனது ஒரே பிள்ளையான நிலாவை படிப்பிப்பதற்காக பணம் சம்பாதிக்க முடியாதவர். அவளது உயர்தரபரீட்சைக்கு இன்னும் இரண்டு நாட்கள் தான் உள்ளன.

அவ்வாறெல்லாம் யோசித்துக் கொண்டு பெரிய தந்தையின் வீட்டை நோக்கி நடக்கின்றாள். அங்கு பெரியதாயாருடனும் வைத்தியசாலை நோக்கிப் புறப்படுகின்றாள். கணவனை கூட வைத்தியசாலை சென்று பார்வை இடமுடியாமல் கனகம் (நிலாவின் தாயார்) படுக்கையிலிலே இறைவனை நினைந்து வணங்கிக் கொண்டிருந்தாள். அப்பொழுது ஒலிக்கிறது தொலைபேசி. அதனைப் பார்த்த

காகம் அதை எடுத்து கதைத்த போது நிலா சொன்னாள் அம்மா! அப்பாவை கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் போயினமாம் நானும் பெரியப்பாவும் தான் போகப் போறம் எனச் சொன்னாள். அதற்கு அவளது தாய் அம்மா நிலா உனக்கு சோதினை இருக்கில்லையா நீ போகத் வேண்டாம் எனச் சொன்னாள் அந்த வேளையில் நிலா தாய்க்குச் சொல்கிறாள். இல்ல அம்மா அப்பாவ விட்டுட்டு எப்படி நான் வாறது அப்பாக்கு சுகம் வரும் எங்களைக் கடவுள் கைவிடமாட்டார். அப்பா சுகப்பட்ட உடனே நான் வந்துவிடுவேன் நாளை எனச் சொன்னாள்.

கொழும்பு வைத்தியசாலைக்கு சென்ற நிலாவின் வாழ்க்கையிலே ஓர் பேரிடி விழுந்தது. வைத்தியர் ஒருவர் வெளியே வந்து "பிள்ளை உங்கட அப்பாவ எங்களால காப்பாற்ற முடியல "very sorry" எனச் சொல்லிவிட்டு சென்றார். அவ்வேளை வைத்தியசாலையே கலங்கும்படியாக நிலா கதறியழுகின்றாள். வைத்தியர்கள், தாதியர்கள் எல்லோரும் சமாதானப்படுத்தியும் அவளது ஓலம் நின்றபாடில்லை இறைவனை எவ்வளவு நம்பியிருந்தோம் எங்களைக் கைவிட்டார் என கதறியழுதாள். பரீட்சைக்கு இன்னும் ஒரு நாளே உள்ளது. அன்றும் கொழும்பு வைத்தியசாலையில் இருந்து அவளது வீட்டுக்கு வந்து பரீட்சைக்கு செல்ல மறுத்தாள் பெரியதந்தை நிலாவிடம் வந்து "அம்மா உயர்தர சோதினையல்லோ நீ போய் எழுதிவிட்டு வா" என சொன்னார். தந்தை இறந்த பொழுதிலே எந்த மகளுக்கும் எந்த மகனுக்கும் பரீட்சை எழுத மனம் வரும்?

என்றாலும் எல்லோரதும் கட்டளைக்கு இணங்க பாடசாலை அதிபர் நிலாவிடம் வந்து நிலாம்மா school ல முதலாவதா வாறனீ வந்து பரீட்சை எழுதும்படி ஆறுதல் கூறி அழைத்துச் சென்றாள். நிலாவும் பரீட்சை எழுதினாள். தந்தை இறந்து நான்கு மாதங்கள் கடந்துவிட்டன.

உயர்தரப் பெறுபேறுகள் வெளியானது. நிலாவும் தனது பெறுபேற்றை பார்க்க சென்றாள் ஆனால் பொறியியல் துறைக்கு பல்கலைக் கழக அனுமதிக்கு அவளது பெறுபேறு குறைவாக காணப்பட்டது.

நம்பிக்கையோடும் சிறிது மனவருத்தத்தோடும் மீண்டும் உயர்தர பாடத்தை படிக்கச் சென்றாள். அன்றுமுதல் ஒவ்வொரு நாளும் தந்தையின் படத்திற்கு முன்னால் வந்து "அப்பா என்னால் பொறியியலாளராக வரமுடியும் உங்களின் ஆசையான ஒரு engineer ஆக வருவேன் எனக் கூறி வணங்கிவிட்டு படிக்கச் செல்வாள். கொஞ்சம் கொஞ்சமாக நாட்கள் உருண்டோடியது. மனதில் கவலைகள் குறைந்தது விடாமுயற்சியாக அதே வேகத்துடன் படித்தாள். பரீட்சையும் நெருங்கியது. ஒருநாள் ஆசிரியர் ஒருவர் அவளிடம் வந்து நிலா நீ முதல் தடவையும் பரீட்சை எழுதி காணாது. இந்த முறையும் என்ன செய்யப் போகிறாய் எனக் கேட்டார். அவளது நா ஓய முதல் இல்லை சேர் என்னால் இந்தமுறை மாவட்ட நிலையிலே இடம்பிடிக்க முடியும் பொறியியலாளராக வரமுடியும் என திடமாக கூறினாள் ஆசிரியரும் சரி பார்ப்போம், எனக் கூறிக்கொண்டு நகர்ந்தார்.

பரீட்சை ஆரம்பமானது நிலா ஒவ்வொருநாளும் பரீட்சைக்கு சென்று வந்தாள். பரீட்சை முடிந்து பாடசாலையில் பெறுபேறும் வெளியானது. அங்கு சென்ற நிலா ஆனந்த வெள்ளத்திலே நனைந்தாள் மாவட்ட நிலையிலே முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டதை உடனே தாயிடம் வந்து கூறினாள். அங்கு வந்த ஆசிரியரும், பெரிய தந்தையும், அயலவர்களும் நிலா நம்பிக்கையால் தான் இவ்வாறு முன்னேற உன்னால் என மெச்சினர்

அங்கு வந்த பத்திரிகையாளர் நிலாவை செவ்வி கண்ட போது நிலா கூறினாள் "நான் நம்பிக்கை வைத்து படித்ததால்தான் முதலிடம் பெற்றேன். அதேபோல் அனைவரும் நம்பிக்கையோடு செயற்பட்டால் நம்பிக்கை ஏணி போல இருந்து எம்மை உயர்த்தும். மீண்டும் மீண்டும்

நம்பிக்கையே நம்மை உயர்த்தும்" என அனைவருக்கும் உதிக் கொண்டேன் என அந்த செயலினை நிறைவு செய்தான்.



# சவால்களை வெற்றி கொள்வோம்

## பொதுமக்களே!

நாம் இலங்கையில் மக்கள் மற்றும்
பொது மக்கள் பல சவால்களை எதிர் கொள்கின்றோம்.

[illegible]


நாம் பல சவால்களையும் [illegible] வெல்லுவோம் [illegible] கொள்ளுவோம்

[illegible]

நாங்கள் வீடுகளிலும், பாடசாலைகளிலும், வேறு
இடங்களிலும் சவால்களை எதிர் நோக்குகின்றோம்

உன்னையே நீ சீர்தூக்கிப் பார்
உயர்வு உன் கையில்

கல்வி எனும் விருட்சத்திற்கு
முயற்சி எனும் நீரை ஊற்றி
வெற்றி எனும் கனியைப் பறிப்போம்.



கவிதை

# உயர்வு உன் கையில்

தாயின் கருவிலே உதித்து
பூமித் தாயின் மடியில் தவழ்ந்து
இறைவனின் பாதத்தில் விழுந்து
வாழ்வது வாழ்வா?

உன்னையே நீ அறி
உலகம் உன்னை மதிக்கும்
உன் கையை நீ நம்பு
உலகம் உன்னை நம்பும்.

முயற்சியைய கை தூக்கு
சாதனை உன் கையில்
வாழ்வோடு போராடு
வெற்றி உன்னோடு வரும்.



# முயற்சி

வெற்றி என்ற நிலையத்தை காண

முயற்சி என்ற படிக்கட்டுகளைக் கடந்திடுவாய்.

மாற்று என்ற நிலையத்தைத் தேட

இமயம் என்ற மலையேற்று கலைஞனாகிடு.

உன்னையே நீ அறிவாய்.

துணிவுடனாய் செயல்படுவாய்.

முயற்சியோடு இருந்திடுவாய்

வெற்றி தனைப் பெற்றிடுவாய்.



## பண்பைப் பழகுவோம்

உன்னால் முடியும் மனிதா உன்னையல்ல
உலகையே மாற்றுவதற்கு எழுந்துவா
விரைந்து செயற்படு இன்றே உண்மை
வழிகளை வழிக்கச் செய்ய

வழிகளால் மொழிபெயரும் மழலைகளை
சிந்தைமிக்க உலகிற்கு அழைத்துச்செல்
நாதோடு கதை சொல்லும் முதியோரை
நாவுடன் கட்டியணைத்திடு

முயன்றால் முடியாதது எதுவுமில்ல தானே
முன்னேற இன்றே செயற்படு
பண்பான நாடே உண்மையான
பலம் வாய்ந்த வல்லரசு.

ஒன்றிணைந்து செயற்பட்டால் இணைந்திடுவோம்
ஒருங்கிணைந்த சமூகமாக மாறிடுவோம்.
காற்றுக்கு வேலிபோட முடியாது மனிதா
காரணமின்றிய உன்பண்பாட்டு சீரழிவிற்கு வேலிபோட முடியும்.

உள்ளத்தில் வலிகள் பல கொண்ட சிறுவர்க்கு.
உலகத்தில் வாழ பண்பைப் பழகுவோம்.
மகிழ்வு ஒன்று எமக்கு வேண்டுமெனில்
மனத்தினிலே பண்பாடு மேலோங்க வேண்டும்.

அகிலம் முழுவதும் அமைதியுடன் வாழவே
அன்புகொண்ட நெஞ்சத்தை உருவாக்குவோம்.
சிறுவர்களை மதிக்கவே மதிகொண்ட மனிதரும்
சிறுவர்ணங்களை உருவாக்கிடுவோம்.

1. கல்வி கற்கும் மாணவர்களை நெறிப்படுத்திடவே
கேடற பண்பாடு ஊட்டிடுவோம்.
உள்ளம் என்னும் கூண்டினிலே மன உறுதி
உண்டானால் உலகமே உன் கையில்.

பண்பாடு கொண்ட நம் தமிழ்கலாசாரத்தினை
பாழாகாது கட்டிக் காத்திடுவோம்.
பண்பு எனும் விதைகளை பசு மனதினில் பரப்பி
பண்பான நேர்களை உலகிற்கு அளிப்போம்.

வாழ்வு என்பதே போராடும் போர்க்களம்
வாழ நினைத்தால் வாழ்ந்து காட்டலாம்.
மரணம் என்பது உண்மைநிலை நான் உணர்ந்து
பயமின்றி வாழ்ந்தால் அதுவும் தூரமே.

அச்சமின்றி எழுந்துவா உன் உறவுகளை
அகிம்சை வழியால் மாற்ற
கைவிலங்கு மாட்டிய கைதிகளையும்
கைகோர்த்து அரவணைப்போம்.



"அப்பா! தன்னை விட வலிமை குறைந்த யாரையும் அடிக்கக் கூடாது என்று சொன்னீர்களே".

"ஆமாம் அதுக்கென்ன இப்ப".

"அதை ஏன் சிங்கத்திடம் சொன்னீர்களென்றால் நல்லா இருக்குமப்பா".

சார் வழியில் யாராவது போலீஸ்காரர்களைப் பார்த்தீர்களா?

"யாரையும் பார்க்கவில்லை. ஏன் கேட்கிறீர்கள்?"

"சரி உன்னுடைய வாட்ச், மோதிரம், செயின் எல்லாவற்றையும் கழற்றிக் கொடுங்க."

"டாக்டர்! எனக்கு மறதி அதிகமாயிடுச்சி. எல்லாவற்றையும் உடனுக்குடன் மறந்து விடுகிறேன்."

"அப்படி என்றால் நீ இப்பவே பணம் கொடுத்தால் தான் உனக்கு வைத்தியம் பார்ப்பேன்."

"பட்டாபி! ராவணனை உன்னால் கொல்ல வைக்க முடியுமா?"

"உன் கேள்விக்கு பதில் சொல்கிறேன் நாளைக்கு"

"நான் புதுசா கண்டு பிடிச்ச மருந்து. இதைக் குடிச்சுப் பாரேன்".

"என்ன மருந்து?"

"கொஞ்சம் சாப்பிட்டால் போதும் சாப்பிட்டவர்கள் உண்மை பேசுவார்கள்."

"எங்கே கொஞ்சம் தா. ஆ! ஆ! இது சாக்கடைத் தண்ணி இல்லை."

"பார்த்தியா "உண்மை பேசுறே"

"அம்மா! தாயே! சாப்பிட ஏதாவது மிச்சம் இருக்கும்மா."

"போன வாரம் தானே உனக்குப் போட்டேன்."

"ஆமாம்மா அதைச் சாப்பிட்டுத்தான் உடம்பு சரியாகி இப்பதான் திரும்ப வந்திருக்கிறேன்."

# நம்பிக்கை

நம்பினேன் நம்பவில்லை

நெருங்க நம்பினேன்

நம்பியதற்காக நம்பினேன்

நம்பியதற்கும் நம்பாததற்கும் காரணம்

உண்மை உணர்வு

நம்பிக்கை தானே

வாழ்க்கை.

ஓவியம்



# செல்வமும் கல்வியும் சிறப்பும்

பூந்தோட்டம் என்னும் அழகிய கிராமம். அக்கிராமத்தில் வேலாயுதம், கௌரி என்னும் இரு தம்பதிகள் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் மிகவும் வறுமையான குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இவர்களிடம் கல்விச் செல்வம், செல்வந்தம், மற்றும் குழந்தைச் செல்வம் எதுவும் இல்லை. அக்குடும்பத்தின் தலைவனான வேலாயுதம் விறகு வெட்டி விற்றுத் தனது குடும்ப வாழ்க்கையை ஓட்டி வந்தார். பலகாலம் சென்றும் இவர்களுக்கு குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லை. இவ்வாறு இருக்கையில் இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. மிகவும் மகிழ்வடைந்தார்கள். மிகவும் கஷ்டப்பட்ட குடும்பமாயினும் அக்குழந்தைக்கு தினேஷ் எனப் பெயரிட்டு அன்பையும் பாசத்தையும் அள்ளி வழங்கியதோடு அல்லாமல் பல புத்திமதிகளையும் ஊட்டி வளர்த்தார்கள்.

இதே சமயத்தில் அயல் வீட்டாருக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இவர்கள் இணை இல்லை என்ற மிகவும் செல்வந்தர்கள். இவர்களோ தமது குழந்தைக்கு அசோக் எனப் பெயரிட்டு அன்பையும் பாசத்தையும் வழங்கியதல்லாமல் பணத்தைப் பற்றியும் பணத்தின் தற்பெருமை பற்றியும் ஊட்டினார்கள்.

சில காலத்தின் பின்னர் இவர்கள் பள்ளியில் சென்று கல்வி கற்றார்கள். இருவருமே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள். இருவருமே பாடசாலையில் புகழ் பெற்ற மாணவர்களாகத் திகழ்ந்து பெற்றோருக்கு பெருமை தேடிக் கொடுத்தனர்.

சிறு வயதில் இருந்தே ஆர்வத்துடன் கல்வி கற்று வந்த அசோக் உயர்கல்விக்காக இராமநாதன் கல்லூரிக்குச் சென்றான். அதே வேளையில் தினேஷும் தனது சாதாரண கல்வியை முடித்து உயர்கல்விக்காக அதே பாடசாலைக்குச் சென்றான்.

இருவருக்கும் அனுமதி கிடைக்கப் பெற்று ஒரே வகுப்பில் சேர்க்கப் பட்டார்கள். தினேஷ் முன்னைய ஆர்வத்துடனே கல்வி கற்று வந்தான். ஆனால் அசோக் கல்லூரிக்கு வந்ததும் தன்னைப் போன்ற வேறு செல்வந்த மாணவர்களுடன் நட்புறவு கொண்டு நற் பழக்கவழக்கங்களை மறந்து மிகவும் தீய பழக்கவழக்கங்களைப் பழகி விடலானான். புகைப் பிடித்தல், மது அருந்துதல், பெண் பிள்ளைகளுக்குத் தொல்லை கொடுத்தல் போன்ற கெட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தான். இவனது செயற்பாடுகளைப் பார்த்த தினேஷ் மிகவும் கவலையுற்று அசோக்கை எப்படியாவது திருத்துவதற்கு முயற்சி செய்தான்.

இப்படி இருக்கையில் அவர்களுக்கான இறுதித் தேர்வுப் பரீட்சை நெருங்கியது. இருவரும் பரீட்சைக்குத் தோற்றினர். இதில் தினேஷ் சிறப்புத் தேர்ச்சி பெற்று. கட்டடக்கலைஞனாகி தனது தாய் தந்தையரின் வாழ்வில் ஒளியேற்றினான். ஆனால் அசோக் சித்தியடையவில்லை. இதனை அறிந்த தினேஷ் அசோக்கிடம் சென்று பேசினான். ஆறுதல் கூறும் வகையில் "உன்னாலும் முன்னேற முடியும்" என்று கூறினான். அசோக்கும் ஆம் என்னாலும் முன்னேற முடியும் எனக் கூறி தன்னைத் திருத்தி வாழ்ந்தான்.

தான் வாக்களித்த படியே மறுபடியும் கவனமாகப் படித்து பரீட்சையில் தோற்றி. சித்தி பெற்று சுயனும் ஒரு கட்டடக் கலைஞராகினான், தாமும் பெருமை பெற்று. தமது பெற்றோருக்கும் பெருமையைத் தேடிக் கொடுத்த இவர்கள் பின் நல்ல நிலைமைக்காக வாழ்ந்து வந்தார்கள்.

* முற்றும் *

ஜெ. ஜெகுமார்
12 Arts 'B'

# உன்னால் முடியும்



# புதிய பாதை.

அந்தி வானம் தன் செந்நிறத்தை மூடி மறைக்க இருள் எனும் போர்வையைப் போர்த்திக் கொண்டிருந்த நேரம் அது. அந்தக் கடற்கரையோரச் சாலையில் ஒரே சன நடமாட்டம். இயந்திரமான வாழ்க்கையில் சிறைபட்டுக் கொண்டு, தம்மைத் தவிர வேறு யாரையும் திரும்பிக் கூடப் பார்க்க முடியாத நிலையில் அந்த மனிதர்கள். அப்படிப்பட்ட ஒரு சூழலில் தான், ஒரு தாழை மரத்தின் கீழ் குந்திப் பிடித்தபடி உட்கார்ந்திருந்தாள் வானதி. ஏதோ ஒன்றைப் பறிகொடுத்து விட்ட சோகம் அவள் கண்களை ஆக்கிரமித்து இருந்தது. அதற்கும் மேலாக 'இனி என்ன செய்யப்போகின்றோம்?' என்ற கேள்வி அவள் மனதில் பூகம்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அவளது கண்கள் மழை போல் ஓயாதடித்திருந்த அந்த கடலலைகளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. அவை தானே அன்று குதூகலமாய் வாழ்ந்து வந்த அவளது குடும்பத்தைச் சின்னாபின்னமாக்கியவை. அன்றாடம் உழைத்து அன்றாடம் உண்டு வாழ்ந்து வந்தாலும், அவர்கள் எத்தனை மகிழ்ச்சியாக இருந்திருக்கிறார்கள்.

கிறிஸ்துமஸ் முடிந்து மகிழ்ச்சியாக எழுந்த அந்த நாள் தானே அவளது வாழ்வை சூனியமாக்கியது. "கடவுள் என்றும் நம்மைக் காப்பான்" என்று ஓயாமல் கூறும் அவளது கணவனையும், அவளது ஐந்து வயது நிரம்பிய ஆண் மகனான 'விதுர்'ஐயும் அல்லவா அந்தக் கடலலைகள் தன் கோரப் பசியால் உண்டிருக்கின்றன. அந்த சம்பவத்தை நினைக்கும் போதெல்லாம் அவள் கண்கள் குளமாகிவிடும். அவளுக்கென்று சொந்த பந்தங்கள் யாருமில்லை. தனது கணவனையும், மகனையும் அழைத்துக் கொண்டு தன்னை மட்டும் தனித்து விட்டு விட்ட இறைவனைத் தான் அவள் மனம் குற்றம் சொல்லியது. "இனியும் வாழ்ந்து பிரயோசனமில்லை. அவரிடமே போய்ச் சேர வேண்டியதுதான்" என்று தன் மனதிற்குள் தீர்மானமொன்றை எடுத்தவளாக திடீரென்று எழுந்தாள். பூதகரமாய் தன் மனதிற்குள் தீர்மானமொன்றை எடுத்தவளாக திடீரென்று எழுந்தாள். பூதகரமாய் தன் முன் வந்து நிற்கும் எதிர்காலத்தை அவளால் எப்படித்தான் தனியாக வெல்லமுடியும். எழுந்து நின்றவாறே தன் கண்களை தன் குடிலின் பக்கம் செலுத்தினாள். ஒரு வருடமாக வேயாத பனை ஓலைக் கூரை, இன்றோ நாளையோ இடிந்து விழும் நிலையில் நான்கு சுவர். குடிசை என்று சொல்லக்கூட முடியாத அதற்குள் தான் வானதி இத்தனை

வசமாய் வாழ்ந்து வருகின்றான். ஏதோ பெயருக்கு ஒன்றிரண்டு சாமான்களும், ஒன்றிரண்டு மாற்று துணிகளும். இத்தனை நாளாக அரசாங்க நிவாரணம் என்ற பெயரால் கொடுத்தவற்றை வைத்துத்தான் அவன் சமாளித்து வந்தான். ஆனால் இனிமேல் என்ன செய்வது? எத்தனை நாளைக்குத்தான் நிவாரணத்தை நம்பி வாழ்வது. அக்கம் பக்கத்திலும் சில மீனவக் குடிசைகள் இன்னும் இருக்கத்தான் செய்தன. அரசாங்கம் தடை போட்டாலும் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த இடத்தை நீங்க மறுக்கத்தான் மனம் வரும். அப்படியொரு மன உணர்வால் தான் வானதி தன் குடியில் இத்தனை நாள் வாழ்ந்து வந்தான். ஆனால் இனி .....?

முடிவெடுத்து முடித்தவனாக வானதி மெல்லக் கடலை நோக்கிச் சென்றான். கடலலைகள் தன் கால்களை நனைக்கும் தூரத்தில் சென்று நின்றான். பொங்கி வந்த கண்ணீரை, எச்சிலை விழுங்கி அடக்கிக் கொண்டான். "மாரியம்மா, அம்மாவையும், அப்பாவையும் எடுத்த நீ என்னையும் எடுத்துக்கோம்மா. நா! உன்கிட்டயே வாறன்" என்று வாய்விட்டுக் கூறிவிட்டு கடலினுள் சங்கமமாக காலெடுத்தான். எங்கிருந்தோ "அம்மா" என்று அழுகுரல் கேட்டது. அவன் நின்றான். ஆனால் திரும்பவில்லை. ஆனால் மீண்டும் ஒருமுறை அம்மா என்று அழைத்த அந்த அழுகுரலைக் கேட்டு அவனால் திரும்பாமல் இருக்க முடியவில்லை. ஏனென்றால் அது, அவனது அந்நாள் குரலைப் போன்று இருந்தது. திரும்பிப் பார்த்த அவனுக்கு, எதிரே சுமார் இரண்டு வயது நிரம்பிய ஒரு மழலை தென்பட்டது. அது அம்மா, அம்மா என்று அழைத்தவாறு கடலை நோக்கி வந்து கொண்டிருந்தது. ஓடிச் சென்று அதனைத் தூக்கி எடுத்தான் வானதி. சுற்று முற்றும் பார்த்தான். யாரையும் காணவில்லை. அவனுக்கு இது பெரும் சங்கடமாக இருந்தது. சாகப் போனவனை அல்லவா இந்தக் குழந்தை 'அம்மா, அம்மா' என்கிறது. சரி, இதனைப் பெற்றோரிடம் ஒப்படைத்து விடுவோம், என்று நினைத்து தெருவினுள் உள்நோக்கிச் சென்று அங்கிருந்த அகதி முகாமை அடைந்தான். அங்கிருந்தவர்களை விசாரித்தான். அவனது ஊகமும் சரிதான். அந்தக் குழந்தை அங்கிருந்துதான் வந்திருந்தது.

அங்கிருந்த தாயிடம் குழந்தையை ஒப்படைத்து, நடந்ததைச் சொன்னான். ஆனால் அவள் கூறிய போது இருந்த பதட்டம் கூட தெளிவாக இருக்கவில்லை. 'சரி சரி' "இதை எங்கேயாவது போட்டுட்டு போ. இருந்தா இருக்கட்டும். செத்தா சாகட்டும். அப்பனையும், ஆத்தாளையும் விழுங்கிட்ட தனியா இருந்து எங்கட உயிரை எடுக்குது." என்று வெறுக்கென்று கூறிவிட்டு நகர்ந்தாள். ஆனால் குழந்தையோ அழுது கொண்டிருந்தது. வானதிக்கு வேறு வழியில்லை. குழந்தையை கீழே இறக்கிவிட்டு மெல்ல நகர்ந்தான். ஆனால் குழந்தையோ தன் பிஞ்சுப்பாதங்களால் தவழ்ந்து வந்து அவன் கால்களை கட்டிக் கொண்டு 'அம்மா' என்று விக்கல்கள், விசும்பல்கள், அழுகையோடு சொன்னது. வானதியின் மனம் அனல்பட்ட மெழுகு போல் இளகியது. குழந்தையைத் தூக்கி அணைத்துக் கொண்டான்.

அப்போது தான் வானதி அந்தக் குழந்தையின் கண்களைப் பார்த்தாள். ஏதோ ஒரு ஏக்கம், தவிப்பு, அன்பு, எதிர்பார்ப்பு, அப்படியே அவளது வலி, அவள் இழந்த வாழ்க்கை அனைத்தும் அந்த கண்களுக்குள் தெரிந்தது. வானதி ஆச்சரியப்பட்டுப் போனாள். அப்போது அந்த மழலை தன் இதழ்களை விரித்து மெல்லியதாய் புன்னகைத்தது. அந்தப் புன்னகையின் சக்தியால் வானதியின் சோகம், துடிப்பு, இருள் அனைத்தும் கலைந்தது. அவளது கட்டுக்கள் மெது மெதுவாக அவிழ்ந்தன. மனம் லேசானது. வானதிக்கு திடீரென்று தெளிவு பிறந்தது. குழந்தையை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். அவளின் தடுமாற்றம் மாறிவிட்டது. அவள் வாழப்போகிறாள். அந்தக் குழந்தைக்காக அவள் வாழப் போகின்றாள்.

வானதி தன் புதிய பாதையில் வெற்றிகரமாக நடந்து சென்றாள். அவள் ஒரு சாதாரண பெண்ணல்ல. பெண்களின் ஓர் மாணிக்கம். அவளின் புதிய பயணம் என்றுமே ஓயப் போவதில்லை. அந்தக் கடலலைகளைப் போலவே !!!

நன்றி.

# என்னால் முடியும்

என்னால் எதையும் செய்ய முடியும்.


உங்களால் இவற்றை செய்ய முடியுமா?

அதற்கு உங்கள் மத்தியில் எவை எவை இருக்க வேண்டும்

தன்னம்பிக்கை

துணிவு

விடாமுயற்சி



இ. கலைவாணி 12 Arts B



# என்னால்
# முன்னேற முடியும்

# [illegible]

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ் 21ம் நூற்றாண்டானது இன்று பல வகையிலும் வளர்ச்சி அடைந்துள்ளது. ஆம் விஞ்ஞானத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினால் கல்வி, சுகாதாரம், தொடர்பாடல், போக்குவரத்து மற்றும் விவசாயம் என அனைத்து துறைகளிலுமே பாரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. முற் காலத்தில் இல்லாத எத்தனையோ புதிய கருவிகளை நாம் இன்று பயன்படுத்துகிறோம். இவற்றுக்கெல்லாம் காரணம் விஞ்ஞானமே என்றால் மிகையாகாது. இவ்வாறு பல வழிகளில் எமக்கு உதவி செய்கின்ற விஞ்ஞானமானது வாழ்க்கையில் அமைதியை ஏற்படுத்த உதவி செய்யவில்லை.

மனித வாழ்விலே அமைதி நிலைக்க வேண்டுமாயின் நாம் ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். அறிவியல் விஞ்ஞானத்தை எவ்வாறு நம்பி அதன் வழி செல்கின்றோமோ அதே போல் நாம் அறநெறியை நம்புவதில்லை. இவ்வாறு அறநெறியையும் மதித்து நம்பிக்கையுடன் செயற்பட்டால் முன்னோர்கள் போல நாமும் அமைதியாகவும் நல்ல மனிதனாகவும் சமூகத்தில் வாழலாம். இவ்வாறான நம்பிக்கையானது சிறு வயதிலிருந்தே மாணவர்களிடத்தில் வளர்க்கப்பட வேண்டும்.

பாடசாலையானது மாணவர்களுக்கு கல்வியை மட்டும் கற்றுக் கொடுத்து விட்டால் போதாது. நல்ல பண்புகளையும் மாணவர்களிடத்தே வளர்க்க வேண்டிய முக்கிய பொறுப்பும் பாடசாலையிடத்தே காணப்படுகிறது. பாடசாலையில் நடைபெறும் பல்வேறு செயற்பாடுகளினூடாக தன்னம்பிக்கை வளர்க்கப்படுகிறது. அதாவது பாடசாலையில் நடைபெறும் போட்டி நிகழ்வுகள். போட்டி என்று இடம்பெறும் போது விளையாட்டு போட்டி, பரீட்சைகள், மற்றும் இணைபாட விதானச் செயற்பாடுகளின் போது மாணவர்கள் மிகவும் ஊக்கத்துடன் செயற்பட்டு தமது திறமை வெளிக்காட்டுவார்கள்.


நாம் ஒரு செயலில் நம்பிக்கை வைத்து செயற்பட்டால் மாத்திரமே வெற்றி பெறலாம். ஒரு செயலில் நாம் வெற்றி பெற வேண்டுமாயின் தன்னம்பிக்கையுடன் முயற்சியும் செய்ய வேண்டும். 'முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்' என்கிறது முதுமொழி. இதற்கிணங்க நாம் ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையையும் முயற்சியையும் எம்முள்ளே வளர்த்துக் கொள்ள வேண்டும். பரீட்சையிலே நிச்சயமாக சித்தியடைவேன் என்ற ஒரு நம்பிக்கையை எமது மனதிலே பதித்து தினமும் கற்று வந்தால் நிச்சயமாக சித்தியடைய முடியும்.

அன்பு, அருள், நீதி, நேர்மை, நன்றியுணர்ச்சி, பொறுமை ஆகியன எல்லாம் வாழ்க்கைக்கு அவசியம் என சான்றோர்கள் அறிவுறுத்தினார்கள். திருக்குறள், முதலான நீதி நூல்களும் இவற்றையே உணர்த்துகின்றன. ஆனால் அறிவியலில் ஏற்படும் நம்பிக்கையை போல அறநெறியில் எவருக்குமே நம்பிக்கை ஏற்படுவதில்லை. அன்றாடம் நிகழ்கின்ற விஞ்ஞான கண்டுபிடிப்புக்களை எமது மனமானது வியப்புடன் கேட்டு அவற்றை நம்புகிறது. ஆனால் அருளின் சிறப்பையோ, உண்மையின் பெருமையையோ சொற்பொழிவுகள், நற்சிந்தனைகள் மூலம் எடுத்து விளக்கினால் மனம் நம்புவதில்லை.

இன்றைய கால கட்டத்திலே மனிதனானவன் பல்வேறு தீய வழிகளில் சென்று தனது வாழ் நாட்களை வீணாக கழித்துக் கொண்டிருக்கிறான். இவ்வாறு மனிதன் தீய வழிகளில் செல்ல காரணம் அறிவியல் வளர்ச்சி என்றுதான் கூற வேண்டும். அறநெறியானது மனிதனை நல்வழிப்படுத்த வல்ல பல விழுமியப் பண்புகளை உணர்த்தி நிற்கிறது. அறநெறியில் நடப்பவர்களே வாழ்க்கையில் மின்னுவார்கள். திருவள்ளுவர், திருமூலர் முதலான சான்றோர்கள் அறநெறியையே வற்புறுத்துகின்றனர்.

வெற்றியின் முதல் படி தோல்வி என்கிறார்கள். நாம் வாழ்க்கையிலே வெற்றியடைய வேண்டுமாயின் முதலில் தோல்வியைத் தழுவிக் கொள்ள வேண்டும். நாம் வாழ்க்கையில் தோல்வியடையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமது மனதினுள் நம்பிக்கை ஏற்பட்டு நாம் இரு மடங்காக முயற்சி செய்ய வேண்டும். இம் முயற்சியினாலேயே நாம் வாழ்க்கையில் உண்மையான வெற்றியினைப் பெற முடியும்.

ஆகவே நாம் வாழ்க்கையில் உயர்வடைய வேண்டுமாயின் நாம் சிறுவயதிலிருந்தே நம்பிக்கையை எம்முள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.



# கல்வி

தொடரு உன் கல்வியை
இன்னல்கள் பதிலை நீ பயப்படாமல்
நிறை தொலைந்த உன்
சிந்தனைகளையும் அனைத்தும் நிறைய வளர்ப்பாக்கு!

ஏன் இனி தயக்கம்
தனிமையும் இனிமையும்
துயமாய் இருக்கும்போது
எதையும் உன்னால் சாதிக்கலாம்!

எங்கே இன்றே தொடரு உனது படிப்பை
ஆசான் அடி எடுத்து தருகிறார்.
ஒரு புத்தகம் இன்னொரு கல்விமான்
உருவாகட்டும்.
அறிவுகள் சுடர்விட்டு ஒளிர உன் கல்வி
சத்திய வேள்வி செய்யட்டும்!
எங்கள் கண்ணீருக்கு இலக்கியம் பாரு.

இனியும் தயங்காது
தொடர்ந்து உன் கல்வியை
ஒரு புத்தகத்தோடு!

# அனைத்தும் நீயே நண்பா .

மழலையாய் இருக்கும் வரை .
மாதாவே எனக்கு உலகம் - என்று .
உனை நான் சந்தித்தேனோ .
அன்று முதல் நீயே என் உலகம் நண்பா
துரும்பென இருந்த என்னைத் - தூண் என
மாற்றவே தேவலோகம் விட்டுவந்த
தேவர் குல மாணிக்கமும் நீயே நண்பா .

கண்ணிற்கு மையழகு
கவிதைக்குப் பொய்யழகு .
என் வாழ்விற்கு நீயே அழகு நண்பா .

கல் தோன்றி மண் தோன்றி ; நம் நட்பு
கல் தோன்றுமுன் தோன்றியது ; நம் நட்போ
நாம் மாண்டு மடிந்து மண்ணோடு
மண்ணானாலும் அழியாது நிலைத்திருக்கும் .





துர்க்கா .

ஒற்றுமையை வளர்க்கும் நட்பு.




# நட்பு

பொன்னகத்தில் மிளிர்வது நட்பு.
மனித மனங்களில் ஒளிர்வது நட்பு.
தரணியில் சிறந்தது நட்பு.
துணை நிமிர்ந்தென்னை நிற்க வைத்தது நட்பு



# நண்பன்

கல்வியில் உயர்ந்தவர் கம்பன்.
நடிப்பில் உயர்ந்தவர் சிவாஜி.
அதே போல் வையகத்தில் உயர்ந்தவன். யார்?
அவனே என் நண்பன்.





தர்ஷா.

# பாட்டு

*உன்னை நீயே உயர்த்திப் பார்*

*உயர்வு உன்கையில்*

உன்னால் முடியும் உன்னால்
முடியும்

உயர்வு உன்கையில்
உயர்வு உன்கையில்

உன்னை நீயே
உயர்த்திப் பார்

உயர்வு உன்கையில்
உயர்வு உன்கையில்

உயர்வு வேண்டுமே
மன நிறைவு வேண்டுமே

மனிதனுக்கு உயர்வு வேண்டுமே
உயர்வு வேண்டுமே.


அமைதி, மகிழ்ச்சி நிறைவு வேண்டுமானால்
உயர்வு வேண்டுமே.


உன்னுள் உயர்வு
வேண்டுமே
வேண்டுமே



குமரன் · நந்தியா
10 B

நன்றி




1
2
3

# நலம் தரும் நட்பு

கட்டுரை

இன்று உலகமானது இயங்குவதற்கு காரணம் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள நட்பாகும். நட்பானது புனிதமானது. ஆகையால் நாம் ஒருவர் மீது கொண்டுள்ள நட்பு இறைவன் செயலாக அமைந்துள்ளது. நட்பு என்ற வார்த்தைக்கு அன்பு, பாசம், பிணைப்பு, ஒற்றுமை எனப் பொருள் அமைகிறது. நட்பு இருவகைப்படும். அவற்றில் ஒன்று நல்லவர்களுடன் பழகுவது நல்ல நட்பு என்றும் மற்றையது தீயவர்களுடன் பழகுவது தீய நட்பு எனவும் பொருள்படும். ஒருவருடைய நல்ல நடத்தை, நல்லசிந்தனை, உதவி செய்யும் மனப்பான்மை என்பவற்றால் நட்பு ஏற்படுகிறது. நாம் நல்லவர்களுடன் ஏற்படுத்தும் நட்பே நிலையானது என்பதை உணர்ந்து நல்லவர்களுடன் நட்புக்கொள்ள வேண்டும்.

நல்லவர்களுடன் நாம் நட்புக்கொள்வது நற்பெயரையும், நற்புகழையும் பெற்றுத்தருகிறது. தீயவர்களுடன் சேரும் நட்பு அழிவையே தருகின்றது. நல்ல நட்பை நாம் தேடிக்கொள்வதற்கு கல்வி அறிவு மிகவும் முக்கியமானது ஆகும். "விலங்கொடு இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்" என்கிறார் வள்ளுவர். கல்வி அறிவுடையோரே மனிதன் என்றும், கல்வி அறிவற்ற ஏனையவர் விலங்குகள் என்றும் விளம்புகிறது இக்குறள். இதன்மூலம் கல்வி அறிவு படைத்தோரையே இவ்வுலகு மனிதர்களாக மதிக்கும் என்பது புலனாகிறது. மனிதன் மனிதனாக மதிக்கப்படவேண்டுமாயின் அவன் கல்வி அறிவினைத் தேடிப்பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

ஒருவன் தான் பெற்ற கல்வியின் மூலம் நல்லது எது? தீயது எது? எனப் பகுத்தறிந்து நலம் தரும் நட்பினைத் தேடிக்கொள்ள வேண்டும். கல்வி அறிவுடையார் நட்பை வள்ளுவர் பின்வருமாறு கூறியுள்ளார். "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்நீர பேதையார் நட்பு" அறிவினை நிறைவுடையார் நட்பு வளர்ந்து வரும். அறிவில்லாதவர் நட்பு தேய்ந்து விடும் என்பதே ஆகும். நலம் தரும் நட்பிற்கு அறிவுடையார் நட்பே சிறந்து விளங்கும் என்பதை இக்குறள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

நலமான நட்பிற்கு "அழிவினை நீக்கி ஆறுய்த்து அழிவின்கண் அல்லல் உழப்பதாம் நட்பு" நல்ல நட்பானது நட்பானவன் நன்னெறி தவறும் போது அவனை இடித்துரைத்து நல்வழிப்படுத்தும் நட்பே நலமான நட்பாகும்.

தீய நட்பானது கல்வி அறிவு இல்லாதவர் ஒருவரோடு பழகும் நட்பைக் குறிக்கும். அது அவனை தீய வழியில் இட்டுச்செல்கிறது. அது ஒருவனது ஆக்கத்திற்கு அழிவை ஏற்படுத்துகிறது. இவ்வாறான நட்பினை நாம் கைவிடுவது சிறந்தது. இதனை வள்ளுவர் "சீரிடம் காணின் எறிதற்கு பட்டடை நேரா நிகழ்ந்தவர் நட்பு" எனக் கூறியுள்ளார். பகைவரால் கிடைக்கும் துன்பத்தை விட தீயவரது நட்பு கொடியது.

எனவே நாம் கற்ற கல்வியின் மூலம் நல்லது எது? தீயது எது? என பகுத்துணர்ந்து எமது நலத்திற்கு நன்மை அளிக்கும் நட்பினைத் தேடிக் கொள்ளல் வேண்டும். அதே போன்று நாம் பெற்ற கல்வியினைக் கொண்டு எமக்கு கிடைக்கும் தீய நட்பை விலக்கி நல்ல நட்பைப் பேணி நலமுடன் வாழ்தல் வேண்டும்.



# நலம் தரும் நட்பு

அன்பின்
அர்த்தங்கள் ஆயிரம் நிஜங்களாகும்
நட்பின்
சுகங்கள் வாழ்வின் படிக்கட்டுகளாகும்.

சுமைகள்
நிரந்தரமல்ல சோகங்களும்
நிஜங்களல்ல கண்களில் நெருப்பை ஏற்று
நட்பு புதிய வேகமாகும்.

தாய்மையின்
பரிமாணங்களை அனுபவித்துப் பார்
மனிதனை நல்ல தோழியிடமோ
நண்பனிடமோ படித்துப்பார்
நீயும் தாயாவாய்.

உனக்குள் உன்னைத் தேட
நல்ல நண்பனைத் தேடு
வானமாய் விரட்டுமோதும்
சந்தோஷ மாடியல்கள்!

ஒருவரோடொருவர்
உணர்ந்து
புரிந்து
உண்மைகள் பேசி
ஒற்றுமையாயிருந்து
உணர்வுகளைப் புரிந்து
உறவுகளைப் புரிந்து
வாழ்வதே நட்பு
மணம்!


ஒருவருக்கொருவர்
வீராப்பாய் பேசாது
வீணை தேடாது
விட்டுக்கொடுத்து
விருப்புடன் வாழ்வதே
நட்பு!

நண்பருக்கொரு
துன்பமென்றால் தன் உயிர்
துடியாய் துடிக்கும் என்பதே
புனிதமான நட்பு!

# நான் என்றும் உன் அடிமை நண்பா !



நான் பார் எனில் .
அதில் உயிர் நீ .
நான் ஒளி எனில் .
அதைக் காணும் விழி நீ .
நான் குழல் எனில் .
அதில் சூடும் மலர் நீ .
நான் நந்தவனம் எனில் .
அதில் பூக்கும் அதிசயம் நீ .
நான் மலர் எனில் .
அதில் உள்ள தேன் நீ .
நான் தேன் எனில் .
அதில் சுவை நீ .
நான் கவிதை எனில்
அதில் வரி நீ .
நான் பரீட்சை எனில் .
அதில் வினா நீ .
என்றும் - நீ அரசன் எனில் .
நானோ உன் சேவகனாவேன் .
நாள்தோறும் நான் உன் .
அடிமையாய் இருப்பேன் நண்பா .





துர்க்கா .

இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த

உதயனுக்கு ஓர் எண்ணம் உதயமாயிற்று. மீண்டும் மீண்டும் முயற்சித்தால் எந்த காரியமும் வெற்றி பெறும் என்பதை உணர்ந்து கொண்டான். தாயும் சோம்பியிராமல் விவசாயத்தில் ஈடுபட்டால் பயன் கிட்டுமென்பதை அறிந்தான். வீட்டு மாடியில் பயன்படுத்தப்படாது கிடந்த நிலத்தைக் கொத்திப் பயன்படுத்தினான். தட்டை கூரைகளைப் பசுமையாகப் புனைந்தான்.

பார்த்தவர் வியந்தனர். தன்னிடம் இருந்த பணத்தை வைத்து மரங்களின் கன்றுகளை வாங்கினான். அவற்றைத் தொட்டிகளைப் பயன்படுத்திப் பாத்திகளில் நாட்டினான்.

நேரங்காத்து நீர் இறைத்து அவற்றை நன்கு பராமரித்து வந்தான். அவை நன்கு செழித்து வளர்ந்தன. பெற்று சாதனையில் மாதங்களில் பழங்கள் பறிக்கக் கூடிய நிலையை அடைந்தன. உதயனின் கடின உழைப்பு பயனளித்தது. பொருத்தமானவை கிழங்குகளைச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்றான். எதிர் பார்த்ததைவிட அதிக பணம் கிடைத்தது.


அவனது விடாமுயற்சியைப் பார்த்து அவனை நன்றாக அறிந்த ஊரார் அன்பாகத் தமது தோட்டத்தை உதயனுக்குத் தந்துதவினர். அத் தோட்டத்தில் மாங்காய், கத்தரி, பாகல், பயிறு என்பவற்றைப் பயிரிட்டான். உதயன் வாழும் ஊரும் பசுமையாய் வருமானம் கிடைத்தது. தோட்டச் செய்கையில் உதயன் தொடர்ந்து ஈடுபட்டதால், சிறந்த தோட்டக்காரன் என்ற பெயரையும் பெற்றான். இரண்டு வருடங்களில் அவன் கல்விக்கான தொகையும் சேமித்து விட்டான்.

௫ கொழும்பு சென்ற குமரன் இரண்டு



ஆண்டுகளின் பின் தன் சொந்தக் கிராமத்துக்குத் திரும்பினான். உதயனைச் சந்தித்தான் அவனது முன்னேற்றம் கண்டு பெரும் ஆச்சரியமுற்றான்.


"கொழும்பில் வேலை தேடி அலைந்தேன். எனக்கோ தொழில் எதுவும் ஒழுங்காகக் கிடைக்கவில்லை. தடைகள் தோன்றிய படி ஓரும் அவஸ்தைப் பட்டேன் எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது." என்று கண்ணீர் மல்க அழுதா



# நட்பின் சிறப்பு

சிறந்த நட்பின் ஆழம் இதயத்தில் இருக்கும்
இன்னிசையாய் விழுந்து அழகு கானம் பாடும்.

உடன் பிறப்பாய் எண்ணி
அன்பு காட்டுவது நட்பு.



துன்பம் வருகையில்
தோள் கொடுப்பது நட்பு.

மனஸ்தாபம் ஏற்பட்டாலும்
மனம் விட்டுப் பேசுவது நட்பு.

எதுவித ஏற்பாடுமின்றி
ஏற்படும் உறவு நட்பு.

மனதில் தோன்றும் சோகத்தை மறைக்கச்
செய்யும் நகைச்சுவைக்காவியம் நட்பு.

பிரிவு எனும் மனவலியின் போது
கண்ணீராகப் பேசுவது நட்பு.



- ஸ்ரீ பவதாரணி

# நட்பு

நட்பு என்பது உணர்ச்சி மேலீட்டினால் உருவாகும் ஒருவகை உறவு என்பது வள்ளுவர் கருத்து. அதாவது ஒத்த உணர்ச்சிகளை உடைய இருவரிடையே அன்பின் நிமித்தம் உருவாகும் உரிமையுறவுதான் நட்பு எனப்படும். எப்போதும் தம் இருவருக்கிடையில் வேறுபாடில்லாமல் தம்மால் இயலும் சந்தர்ப்பங்களிலெல்லாம் உதவி செய்து ஒருவருக்கொருவர் தாங்குதல் நிலைதான் நட்பின் அரிய பண்பு; தோழமை எனப்படுவதும் அதுதான்.

தன் நண்பன் தீயவழியில் செல்கிறான் என அறியும்போது அவனுக்கு ஏற்றவேளையில் பொருத்தமான அறிவுரைகூறி அவனை நல்வழிப்படுத்துபவன், அந்நண்பனுக்கு அழிவு ஏற்படுமிடத்தும் உடனிருந்து தானும் அத்துன்பத்தை பகிர்பவனாக இருப்பான்.

நீதிசாஸ்திரங்கள், தமிழ்நூல்களிலெல்லாம் நட்பின் இலக்கணம் மிக அருமையாக சித்தரித்துக் காட்டப்படுகிறது. உலகப் பொதுமறை கூறும் திருவள்ளுவர், நூல்களோடு பயிலும் தொடர்பு எவ்வாறு ஒருவருக்கு இன்பக்கிளர்ச்சியைத் தந்து எம்மையும் நெறியவழியில் ஆற்றுப்படுத்துகிறதோ அதே போன்று நட்பினால் கிடைக்கும் இன்பம் என்று கூறுகின்றது. அதாவது உரியவேளையில் அறிவுகூறுதலை நட்புக்கு எடுத்துக்காட்டாக வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

உண்மை நட்புக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்கள் உலகில் உயர்ந்தோராகக் கணிக்கப்படுகிறார்கள். தமிழில் வந்த இதிகாசமான மகாபாரதம், கண்ணன், துரியோதனனுக்கிடையிலான அற்புதமான நட்பை எடுத்துக்கூறுகிறது. குசேலோபாக்கியானம் கிருஷ்ண பகவானுக்கும் குசேலருக்கும் இடையே நட்பு எனும் உறவின் விசித்திரத்தை காண்பிக்கிறது. இராமாயணத்திலே வேடுவனான குகனோடு இராமபிரான் கொண்டிருந்த நட்பைக் காண்கிறோம். இதைவிடப் பண்டைய தமிழ் இலக்கியங்களிலே கோப்பெருஞ்சோழர், பிசிராந்தையர் நட்பின் சிறப்பைப் புறநானூறு என்ற சங்கநூல் எடுத்துரைக்கின்றது.

ஒரு சடையப்பவள்ளல் இருந்திருக்காவிட்டால் உலகம் போற்றும் அரிய காவியமான கம்பராமாயணத்தை நாம் இன்று கண்டிருக்க முடியாது. என்ற அளவிற்கு கம்பநாடாழ்வார் என்பவருக்கும் சடையப்பருக்கும் மிக நெருங்கிய நட்பு இருந்தமையை அறிகிறோம். நட்பு என்கின்ற கிழமையுணர்வு பயில்தோறும் இன்பம் தரும் நல்ல நூல்கள் போன்றதாகும்.

பாண்டவர்களில் மூத்தவனான கர்ணன் குந்திதேவிக்கு சூரிய பகவான் அருளால் கிடைத்த பிள்ளை. சந்தர்ப்பவசத்தால் துரியோதனன் மாளிகையில் வளர்ந்து வந்தவனை அவனது குலம், கோத்திரம் ஒன்றும் அறியாத நிலையிலும் சோறிட்டுக் காத்தவன் துரியோதனன். கொடைக்குப் பேர் போனவன் கர்ணன்; மிகவும் நல்லவன்; அறநெறி தவறாதவன்; தீரவீரன். இந்தக் கர்ணனை மற்றவர்கள் 'குலமறியாதவன்' என்று எண்ணி எள்ளிநகையாடி உதாசினம் செய்யப் பொறுக்காத துரியோதனன் அவனை அங்க தேசத்து அதிபதியாக அரியணை ஏற்றி அழகு பார்த்தவன். இப்படிப்பட்ட கர்ணன் தன் புதல்வனே என்று தெரியவர தாயான குந்தியானவள் அவனைப் பஞ்சபாண்டவர் பக்கம் சேருமாறு கர்ணனை வேண்டினாள் துரியோதனன் மீது அகலாத நட்புக்கொண்ட கர்ணனோ அவளது வேண்டுகோளை ஏற்கவில்லை. மாறாக சோற்றுக்கடன் தீர்க்க, நண்பன் துரியோதனன் பக்கமே நின்று போராடி அறத்துக்காக வீரமரணமெய்தினான். நட்பின் மகத்துவம் பேசும்போதெல்லாம் இச்சம்பவம் இன்றும் மறக்கப்படாதிருக்கின்றது.

நட்புச்செய்தல் என்றால் அது ஒருவரோடு ஒருவர் சிரித்துப் பேசி மகிழும் பொருட்டு என்று எம்மில் பலர் எண்ணுகின்றனர். ஆனால் நட்பானது உள்ளுணர்வோடு கலந்த அன்புரிமையாகும். உடை நெகிழ்ந்து நழுவி விழும்போது ஒருவனுக்கு உதவுவதே நட்பின் பண்பு என்பதை கர்ணன், துரியோதனன் நட்பு மூலம் அறிகிறோம்.

குசேலரும் கிருஷ்ணரும் பயின்ற தோழர்கள். பின் நாளில் அரசபோகத்திலிருந்த கிருஷ்ணனைத் தேடி வருகிறார் ஏழையான குசேலர். அன்புரிமையோடு நண்பரைச் சந்திக்கத் துவாரகை வந்த குசேலருக்கு அந்தக் கிருஷ்ணன் செய்த உபசாரமும் கொடுத்த உபகாரங்களும் நட்பின் தெய்வீகத்தை உணர்த்துவதாகும்.

முகம் மட்டும் மலரச்செய்யும் நட்பாக இல்லாமல் அகமும் மலர உறவு பாராட்டுவதே உண்மையான நட்பாகும் என்பதற்கு குசேலர் கிருஷ்ணர் கதை நல்லுதாரணமாகும்.

மேலும் நட்பு என்பது சாதி, சமயம், குலம், கோத்திரம், ஏழை, பணக்காரன் என்ற நிலைகளைப் பொருட்படுத்தாததாக அமைய வேண்டும். அறிவுடையவர்களின் நட்பானது பிறை நிறைந்து வளருதல் போன்ற தன்மையுடையது.

நட்பாராய்தல் என்று ஒரு அதிகாரம் செய்த திருக்குறள் ஆசிரியர், ஆராயாது ஒருவருடன் நட்புச்செய்தலை விடக் கேட்டைத் தருவது வேறில்லை என்று கூறி, அவ்வாறு நட்பு ஏற்படுத்தப்பட்ட பின்பு அந்த நட்பை உடையவர்க்கு அதில் விடுதலையும் இல்லை என்றும் எடுத்துரைக்கிறார். நல்ல நண்பர்களைப் பெறுவது கூட எமது புண்ணியம் என்றே கூறவேண்டும்.

அமெரிக்க நாட்டிலே Friendship Day கொண்டாடும் முறை ஆரம்பிக்கப்பட்டது. இது இன்று உலக நாடுகளெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலக நண்பர்கள் தினம் ஒக்டோபர் மாதத்தில் வரும் முதல் ஞாயிற்றுக்கிழமையாகும்.

மொத்தத்தைத் தொகுத்துப் பார்க்கும் போது நட்பானது ஒரு புனிதமான உறவு என்பது தெரியவரும். மாணவர்களாகிய நாம் நல்ல நண்பர்களைப் பெற்று நாட்டில் நல்ல பிரஜையாக வாழ்வோம். வளம் பெறுவோம்.

முற்றும்



சி. அனோஜி
சு. விஜேந்தினி



# சவால்களை எதிர்கொள்ளுவோம்!

அன்பார்ந்த மக்களே!

இன்றைய சமூகம் பல சவால்கள் பல சவால்கள் நிறைந்தது. இச் சவால்களை எதிர்கொண்டு வாழ வேண்டியது எமது கடமையாகும். வாகனவிபத்து, யுத்தம், போதைப் பொருள், மதுபானம், இயற்கை அனர்த்தம் தொற்று நோய் என்பன சவால்களுக்கு உதாரணமாகும்.

இந்த சவால்களை வெற்றி கொள்ள வேண்டுமெனில் வீதி விதிமுறைகளை கடைப்பிடித்தல், சமூக ஒழுங்கு விதிகளை கடைப்பிடித்தல், விழுமியங்களை கடைப்பிடித்தல் மூலம் வெற்றி கொள்ள முடியும்.

ஆகவே இந்நடைமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் சவால்களை எதிர் கொண்டு மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

மக்களே விழித்தெழுங்கள்.!.

எம்மை வருத்தும் கொடிய நுளம்புகளிலிருந்து பாதுகாப்பு பெற இதுவே தருணம். நுளம்புதானே என்று அலட்சியப்படுத்தாதீர். பேராபத்து நம்மைச் சூழும். நுளம்புகள் பயங்கர நோய்க்காவிகள். அவற்றால் டெங்கு, மலேரியா, யானைக்கால் போன்ற நோய்கள் பரவுகின்றன. நுளம்புகளை அழித்தொழிக்க அனைவரும் அணி திரள்வோம். ஆபத்தை தடுப்போம்.

நுளம்புகள் எமது தூக்கத்தை குழப்புகின்றன. நோய்களை பரப்புகின்றன. எல்லா வீடுகளிலும் பாதுகாப்பை மேற்கொண்டால் மட்டும் போதாது சூழலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

தினமும் வீடுகளை உள்ளும் புறமும் சுத்திகரிப்பதோடு மட்டுமன்றி சூழல் சுத்தம் பேண முற்படுங்கள். நுளம்புகளை பூண்டோடு ஒழிப்போம். சுகவாழ்வு காணுவோம்.

நன்றி.

# வெற்றிப் படிகளில் ஏறுவோம்

மாணவர்களாகிய எமக்குக் கிடைத்திருக்கும் இந்த வாழ்க்கை விலை மதிப்பற்றது. தலைசிறந்த இவ் வாழ்க்கையில் நாம் கடந்து செல்லும் ஒவ்வொரு கணங்களும் பொறுப்புணர்வுகளுக்கு தடைக்கற்களைத் தகர்த்தெறிந்து வெற்றியின் படிகளில் ஏறி சிகரம் தொட்டிட வேண்டும். வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க முடியாததும் சிந்திக்க வேண்டியதுமான வாலிபப் பருவத்தினரான நாம் வெற்றிக் கொடி நாட்டி வாழ்வை வென்று கொள்ள வேண்டும்.

முதலில் நாம் எமது மனதில் குடிகொண்டு எம்மை அணு அணுவாகக் கொல்லும் தாழ்வு மனப்பான்மையை வேரோடு தோண்டிப் புதைத்திட வேண்டும். இம் மனப்பான்மையை பிறப்பிலிருந்து வருவதில்லை. நாம் வாழும் சூழலே எம்மை அவ்வாறு மாற்றுகின்றது என்பது வெள்ளிடை மலை. ஆயினும் பருவத்தினரான நாம் ஏன் தாழ்வு மனப்பான்மை அடைய வேண்டும்? என்கின்ற கேள்வி ஒவ்வொருவர் உள்ளத்திலும் எப்போதும் உதிக்கின்றதோ அப்போதே அவர்களது வாழ்வின் இருள் காணாமற் போய்விடும்.

அடுத்தது மாணவரிடையே காணப்படும் தலைக்கனம் தன்னம்பிக்கையின்மை. ஆயினும் அளவுக்கு மிஞ்சிய தன்னம்பிக்கை அகந்தையும் மமதையுமாக உருமாறி ஆளையே அழிக்கும் வல்லமை படைத்ததை. "நான்" என்று நினைப்பது தன்னம்பிக்கை "நான் மட்டும்" என நினைப்பது தலைக்கனம். தன்னம்பிக்கை இல்லையெனின் நாமே நாளை அநாதைகளாகி விடுவோம்.

"நான்" என்று நினைக்காத மனிதன் கால்களால் கூட பிச்சைப் பாத்திரத்தை ஏந்தி நிற்பான்" என்று கவிஞர் பா. விஜய் கூறியது உண்மைதான். எமது தன்னம்பிக்கை எம்மை விட்டு அகலும் போது வெற்றியும் கூடவே போய்விடும். தோல்விகளை மட்டும் அறுவடையாக்கிக் கொள்ள நேரிடும். என்னால் முடியும் என்ற எண்ணத்துடன் போராடும் மாணவர்களின் வாழ்வு உலகம் போற்ற சிறக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

அடுத்து எமது ஒவ்வொருவருடைய மனத்திலும் உயரிய இலக்கொன்று நிரம்பியிருக்க வேண்டும். இலட்சியமற்ற மாணவர்கள் திசைகாட்டியற்ற கப்பலிற்கு ஒப்பானவர்கள். எதிர்காலத்தை நோக்கிய

எமது பயணம், சிறந்த இலட்சியத்தை அடைவதாய் இருக்க வேண்டும் எமது முன்னோர்களின் வாழ்க்கையின் சிறந்த அத்திவாரம் இலட்சியங்களை குறிக்கோள்களுமே. எமது செயல், சிந்தனை, சொல் அனைத்துமே அதனைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். அநாவசியமான சிந்தனைகளும் தேவையற்ற செயல்கள் என்பன எமது சீரிய பார்வையின் கவனக் கலைப்பான்கள்

வெற்றிகள் தொடர்ந்தும் புத்திக் கூர்மை மிக்க பெரியோருக்கே என நினைப்பது முற்றிலும் தவறானது. புதுப்புது வழியைக் கொண்ட ஒவ்வொரு பார்வையும் வெற்றியின் அடிப்படைகள். "விதி" என்னும் போதையில் மனதைச் செலுத்தி மதி கட்டுப்பாட்டை தகர்த்திட வேண்டும். முதலில் எங்களை நாங்கள் நம்ப வேண்டும். இது வெற்றிப் படிகளில் ஏறும் வேகத்தை துரிதப்படுத்தும்.

வெற்றியை அடைய மிக முக்கியமானது கல்வி என்னும் தூண்டாமணி விளக்கை பெற்றிட வேண்டும். இப்பெருந்திரவியம் கற்று அதனைச் சிறக்க வாழ்ந்திட வேண்டும். மாணவரையும் மாக்களையும் வேறுபடுத்தும் கல்வியைக் கற்று வெற்றிக்கு வித்திடுவோம். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்". முயற்சியுடன் முன் செல்லும் மாணவர்கள் வெற்றிப் படிகளில் ஏறுவர் என்பதில் ஐயமேதுமில்லை. முயற்சி எமது வாழ்வின் ஒவ்வொரு கருமத்தையும் நிர்ணயிக்கும்.

எனவே, தலைமைப் பண்புகளைக் கடைப்பிடித்து, இத் தலைசிறந்த வாழ்வில் வெற்றிக் கொடி நாட்டி வரலாறு படைத்திடுவோம். பூகம்பத்திற்கும் மண்ணிலும் பூமியில் துளிர்க்கும் விதைபோல் தடைகள் எத்தனை வரினும் தகர்த்தெறிந்து வெற்றியின் படிகளில் விரைந்து ஏறுவோம் !!!.

# நம்பிக்கை.

இளைஞர்களே! முன்னேறாமைக்கும் பல காரணங்களை சொல்லி கொண்டு, காலத்தை "வீணே" என்று ஓட்டிக் கொண்டு வருகின்ற ஒரு சில "நல்லவர்களைப் பற்றி தான் நாமிங்கு பார்க்கப் போகின்றோம். இன்றைக்கு நம் இளைஞர்களைப் பாருங்களேன். தான் முன்னேறாமைக்கு எதையாவது சாக்கு, போக்குகளை சொல்லி கொண்டு, உருப்படாத இளைஞர்களை மேலும் உருவாக்கிக் கொண்டிருப்பார்கள். இளைஞர்கள் இன்றைத் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு தேவையே "போதை" என்று எடுத்துக் கொள்கின்ற நமக்கு இன்னும் புரியவில்லை. அது வேலையாகட்டும்; பணமாகட்டும்; நாம் நினைக்கின்ற வெற்றியாகட்டும்; நாம் எதிர்பார்த்த நினைக்கின்ற சாதனைகளாகட்டும்; எல்லாவற்றிற்குமே ஒரு முயற்சி தேவை. பிறக்கும் போதே சாதனையாளர்களாக, வெற்றியாளர்களாக யாருமே பிறப்பதில்லை. காலப் போக்கிலே ஏற்படுகின்ற சூழ்நிலை மாற்றங்கள், மாற்றங்களைப் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும் என்பதற்கான முயற்சிகள்; இப்படிப் பல நிலைகளில் நாம் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தான் நம்மை இந்த சமுதாயத்திற்கு அடையாளங் காட்டுகின்றன.

"நாம் இந்த சமுதாயத்திலே நல்ல நிலையிலே அடையாளங் காட்டப்பட வேண்டும்" என்று விரும்புகின்ற இளைஞர்களே! முயற்சி செய்யுங்கள். எதைப் பற்றியும் கவலைப்படாமல் முயற்சி செய்வதில் ஈடுபடுங்கள். நம்பிக்கை வைத்து ஏதாவது ஒரு காரியத்தில் ஈடுபடுங்கள். தோல்வி பற்றி கவலைப் படாதீர்கள். ஆனால் நாம் ஈடுபடக் கூடிய காரியம் எது? என்பதை மட்டும் நன்றாக யோசித்து, சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் முடிவெடுத்து, அந்த காரியத்திலே சாதனை படைக்க முயற்சி செய்யுங்கள்.

எடுத்துக் காட்டிற்காக ஒன்றினைச் சொல்கின்றேன் இளைஞர்களே! வேலையில்லாத இளைஞன் ஒருவன், "தனக்கு வேலை கிடைக்குமா? வேலை கிடைக்குமா?" என்று வேலை வாய்ப்பகமே கதி என்று கிடந்தானாம். பாவம், காரியம் கை கூடி வருவதாகத் தெரியவில்லை. அப்போது தான் பார்த்தான் வேலை வாய்ப்பகத்தில் புதிய பதிவிற்காக வந்திருந்த பல இளைஞர்களுக்கு, விண்ணப்பம் எழுதத் தெரியவில்லை. கவலை புரிந்து கொண்டான் இளைஞன். காலை முதல் மாலை வரை புதியதாய் பதிவு செய்ய வருகின்ற படிப்பறிவில்லா இளைஞர்களுக்கு, விண்ணப்பங்களை எழுதத் தொடங்கினான். அரசாங்க சம்பளத்தை விடக் கூடுதலான வருமானம்.

இளைஞர்களே, இது ஒரு சிந்தனையைத் தூண்டும் என்பதற்காக சொல்லுகின்றேன். இது போல இருக்கின்ற வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுவதற்கு முயற்சி செய்து நம்பிக்கையோடு இருங்கள். இளைஞர்களே!. பயங்கரமான காட்டுப் பாதை பகுதிகளை பற்றி நினைத்துப் பாருங்கள். அந்த கருமையான காட்டுப் பகுதியிலும், பின்னைந்திரு ஒற்றையடிப் பாதை என்பது நிச்சயம் இருக்கும். ஒற்றையடி பாதை எப்படி வந்தது? யாரோ ஒருவன் தன் தேவைக்காகப் புதியதாய் வழி கண்டு பிடித்து நடந்திருப்பான். அந்த முயற்சியின் வெளிப்பாடுதான் அந்த பாதையை பலர் பயன்படுத்த தொடங்கியிருப்பார்கள். யாரோ ஒருவன், கருமையான காட்டிலும் வழி கண்டு பிடித்ததைப் போல, முயற்சி செய்து பார்த்தால், நமக்கும் தேவைதொகு வழி தெரியும் வாழ்க்கையில் முன்னேற. நம்பிக்கையோடு முயற்சி செய்து பார்க்கலாமே என்ற ஒரு உத்வேகத்தை வளர்த்துக் கொண்டாலே போதுமானது.

இன்றைக்கு இளைஞர்களிடையே நம்பிக்கையோடு முயற்சியும் குறைந்து கொண்டே வருகின்றது. காரணம் ஜாதகபலாபலன்தானாம்.

"அதிர்ஷ்டம் நமக்கில்லையப்பா" "அவனுக்கு நல்ல நேரம் வந்திருக்கப்பா, அதான் உன்னை மிஞ்சிக்கிட்டு கொட்டுதப்பா" என்றெல்லாம் தான் முயற்சி செய்யாமைக்கும் காலத்தையும் நேரத்தையும் குறை சொல்லிக் கொண்டிருக்கின்ற இளைஞர்களிடையே நம்பிக்கை இருக்க வேண்டும். இவை முயற்சி செய்தால் எங்களுக்கும் கிடைக்கும் என்று. அப்பொழுது தான் வெற்றி கிட்டும்.

அதிர்ஷ்டத்தை நம்புகின்றவர்கள் நேரத்தை எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் உழைப்பை நம்புகின்றவர்கள் முயற்சியை மேற்கொள்வார்கள். இளைஞர்களே! நாமெல்லாம் உழைப்பினை நம்புகின்றவர்கள் 'முயற்சிதான் நம்முடைய மூலதனம்" என்பதில் இளைஞர்களே, நமக்கு நம்பிக்கை வேண்டும்.

இன்றைக்கு உலக கோடீஸ்வரர்களில் ஒருவராகக் கருதப் பெற்ற அம்பானியின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டோமென்றால் ஒவ்வொரு கட்டத்திலும் இந்த நம்பிக்கையோடு முயற்சி செய்து தான் மிகப் பெரிய நிலைக்கு வந்திருப்பார். சாதாரண பெட்ரோல் பங்கிலே வேலை பார்த்தவருக்கு இப்படிப்பட்ட நிலை என்றால் அதற்குப் பின்னாலே இருப்பது நிச்சயமான நம்பிக்கையும், முயற்சி"யும் தான்.

ஒரு அறிஞர் சொல்கின்றார் பாருங்கள். இளைஞர்களே; "எதையுமே முடியாது என்று விட்டு விடாதீர், நம்பிக்கையோடு இருங்கள், அப்போது தான் நாம் வாழும் வாழ்க்கைக்கு ஒரு பொருள் உண்டு." நாம் வாழ்கின்ற வாழ்க்கைக்கு ஒரு அடிப்படை வேண்டும். அடிப்படையை நமக்குப் போட்டுத் தருவதென்பது இந்த "நம்பிக்கை" தான் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நான் பல இளைஞர்களைப் பார்க்கின்றேன். நம்பிக்கை எதுவும் செய்யாமலே, "தன்னால் இவையெல்லாம் முடியாது" என்று கூறுகிறார்கள். சில நேரங்களில் முடிவுக்கே வந்து விடுகின்றார்கள். இளைஞர்களே ஒன்று நிச்சயம்!

"எதுவுமே முதலில் முடியாததாகவே தோன்றும். நம்பிக்கையோடு செய்து பாருங்கள் நிச்சயம் முடியும்." முதலில் நாம் பார்த்து வியந்துப் போனவைகள் எல்லாவற்றையுமே நாம் அதனை அறியாமலே சாதித்து இருப்போம்.

இளைஞர்களே! நம்பிக்கையோடு இருங்கள். அது சின்னஞ்சிறிய கனவாக இருக்கலாம், அல்லது பெரியதாகவும் இருக்கலாம். நாம் சாதிக்க வேண்டிய, செய்ய வேண்டிய நிகழ்வுகளைப் பற்றி கனவு காணுங்கள். கனவு நிறைவாக வேண்டும் என்று மனதார நினைத்து நம்பிக்கையோடு செயற்படுங்கள். நிச்சயம் சாதனைப் படைப்பீர்கள்.

இளைஞர்களே! "நம்பிக்கை தான் வாழ்க்கை" இதனைப் புரிந்து கொண்டவர்கள் தான் அரிய பல சாதனைகளைப் படைத்தவர்கள்.

இதோ நாமும் புரிந்து கொண்டோம்! சாதனைகள் பல புரிவோம்.

# கவிதை.

முன்னைய காலங்களிருந்தே
சவால்கள் பல பல
இன்றைய சமூகம் எதிர்கொள்ளும்
சிக்கல்கள் பல பல

வாகன விபத்து, யுத்தங்கள்
தொற்றுநோய் என்பன சிலவாகிய
நாம் எதிர்கொள்ள வேண்டிய
சவால்கள்.

சிலர் சவால்களைக் கண்டு
மனம் தளர்ந்து விடுகின்றனர் - ஆனால்
சவால்களை தைரியமாக
போராட வேண்டும்.

வாழ்க்கை என்பது ஒரு போராட்டம்
இந்தப் போராட்டத்தை எதிர்த்து
வெற்றியுடன் வாழ்வதே மனித
வாழ்க்கை



சவால்களை எதிர்கொள்வோம்

இன்றைய சமூகம் பல சவால்கள் நிறைந்தது. இந்த சவால்களை உலகில் அனேகமான மக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த சவால்கள் மனிதர்களாகிய நாம் எதிர்கொள்வதன் மூலமே சமூகத்தில் மகிழ்ச்சியாக வாழ முடியும்.

இந்த சவால்கள் பௌதீக சூழல் சார்ந்தவை சமூகச் சூழல்கள் சார்ந்த சவால்கள் என 2 வகைப்படும். அதாவது பௌதீக சூழல்கள் சார்ந்த சவால்கள் எனும் போது விலங்குகள் வெள்ளப்பெருக்கு, சூறாவளி போன்றவற்றையும் தொற்று நோய்களையும் குறிப்பிடலாம்.

சமூகச் சூழல் சார்ந்த சவால்கள் எனும் போது யுத்தம், கலவரங்கள், மதுபானம், வாகன விபத்து என்பவற்றை குறிப்பிடலாம். இவ்வாறான சவால்களை எதிர்கொண்டு வாழ்ந்தால் தான் வாழ்க்கையில் முன்னேறலாம்.

பெருந்து வண்டிகளிலும், புகையிரதங்களிலும் மிதிபலகையில் பயணம் செய்தல் இவ்வாறான சந்தர்ப்பங்களில் விபத்து ஏற்படுகிறது. இவ்வாறான விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க வேண்டுமெனில் நாம் வீதி விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். இந்த விபத்துக்கள் ஏற்படாமைக் ~~இருக்க வேண்டுமெனில்~~ கவனகுறைவும், அறியாமையுமே காரணம். ஆகவே மக்கள் மனதில் இவற்றை நீக்க வேண்டும்.

அடுத்ததாக போதைப்பொருள் மதுபானம் அருந்துவோரை பற்றி பார்ப்போமானால் மதுபானம் அருந்துவோர் அதனை நியாயப்படுத்த பல காரணங்களை கூறுகின்றனர். அதாவது மகிழ்ச்சியைக் கொண்டாட, கவலையை மறக்க, திருப்தியாக உணவு உண்ண இப்படியான காரணங்களை கூறி மது அருந்துகின்றனர்.

இப்படிச் செய்பவர்களை அதிலிருந்து மீட்க வேண்டும். அப்படி யானவர்களுக்கு விடயங்களை எடுத்துக் கூறி விளக்கம் அளித்து அவர்களை காப்பாற்ற முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து உடல், உள ரீதியாக நாம் பல சவால்களை எதிர்நோக்கும் வேளைகளில் அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்வது அவசியமாகும். சீரான உடல் வளர்ச்சிக்கு தேவையான போஷாக்கை பெறுவது இன்று ஒரு சவாலாகும்

எனவே இப்படியான நிலைமைகளை இன்றிலிருந்து மாற்ற முயற்சி செய்வோம். "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்ற பழமொழிக்கு ஏற்ப சவால்களை தைரியமாக எதிர்த்து வெற்றி கொண்டு மகிழ்ச்சியாக வாழ்வோம்.

நன்றி

## சிறுகதை

### மனம் திருந்திய அமலன்


ஓர் ஊரிலே கண்ணன் என்ற மாணவன் வசித்து வந்தான். அவனுக்கு அமலன் என்ற நண்பன் இருந்தான். கண்ணன் ஒரு ஏழை விவசாயியின் மகன் ஆவான். ஆனால் அமலனோ ஓர் அழகான வீட்டுப்பிள்ளை. கண்ணன் மிகவும் படிப்பில் கெட்டிக்காரப்பிள்ளை ஆவான். ஆனால் அமலனோ படிப்பென்றாலே கசப்பான விடயம் என எண்ணினான்.

அவனது நண்பன் கண்ணன் எவ்வளவு அறிவுரை கூறியும் அமலன் கேட்கவில்லை. தனது பணத்தை ஊதாரியாக பயன்படுத்தினான். ஆனால் கண்ணனோ எவ்வா ஊதாரியும் இல்லாமல் பல பரீட்சைகளிலும் சித்தியடைந்தான். அமலனோ மிகவும் கீழ்நிலையில் இருந்தான்.

சிறிது காலத்தின் பின் அவர்களுக்கு சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமானது. அதிலும் கண்ணனே சித்தியடைந்தான். அமலன் மிகவும் கீழ் நிலைக்கு தள்ளப்பட்டான். கண்ணன் மிகவும் உயர் நிலையில் வந்து விட்டான். ஒருநாள் கண்ணன் தனது காரில் ஓர் இடத்தில் நின்று கொண்டிருந்தான். அந்த இடத்தில் ஒருவன் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். ஆ அதோ அந்தப் பிச்சைக்காரன் கண்ட நேகமாக இருக்கிறதே என்று எண்ணிப் பார்த்தான்.

ஆ அதோ அவன் அமலனே ஆவான். அப்போது கண்ணன் அமலனைக் கண்டு ஏன் இவ்வாறு ஆனாய் என்று கேட்டபோது அமலன் கூறினான் அப்போது நான் உன் சொற்களை கேட்டு ஊதாரித்தனத்தை விட்டு படித்திருந்தால் உயர் அந்தஸ்தை பெற்றிருப்பேன் என்று கூறினான். நல்ல நண்பன் எப்போதும் நல்ல வழிகாட்டியாக இருப்பான். அவனின் சொற்களை கேட்டால் உயர்ந்த நிலையை அடையலாம். என்பதை அவன் புரிந்து கொண்டான். ஆகவே சிறுவர்களாகிய எமக்கு கல்வி எமது மூச்சுக் காற்று போன்றது. நாமும் நல்ல நண்பனின் சொற் கேட்டு கல்வி கற்று சிறப்புடன் வாழ்வோமாக!

குறைபாடுகளாய் ஒன்றிணைவோம்
இந்த சாதக பூமியில்
சாதனைகள் பல செய்வோம்!



## நலம் தரும் நட்பு

உலகத்தில் உன்னதமான உறவு நட்பாகும். உணர்வுடன் சங்கமித்த ஒரு கருப்பொருளே நட்பு ஆகும். உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டு ஆகஸ்ட் மாத முதல் ஞாயிற்றுக்கிழமை நட்பு தினமாக கொண்டாடப்படுகிறது. திருக்குறளிலே திருவள்ளுவர் நட்பைப் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

நட்பு என்பது மூன்றெழுத்துதான். ஆனால் நட்பின் ஆழத்தை கூறவே முடியாது. நட்பு ஜாதி, மதபேதம் அனைத்தையும் கடந்தது. நமக்கு ஏற்படும் நன்மை, தீமைகளில் பங்கு கொள்வதும் நட்புதான். பெற்றோரிடம் பகிர்ந்து கொள்ள முடியாத விடயத்தை நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ள முடிகிறது.

நண்பன் எமது இரு கண்களில் ஒரு கண் ஆவான். ஒரு நாணயத்தில் இரண்டு பக்கங்களை போல நண்பர்களையும் இரண்டு கோணங்களில் அவதானிக்கலாம். நண்பனுக்கு ஆபத்து வரும் போது தனது உயிரையேனும் கொடுத்து ஆபத்தில் உதவுபவனே சிறந்த நண்பனாவான். பலரது வாழ்வில் பெரும் திருப்பங்களுக்கும் காரணமாக நட்பு அமைகிறது.

கார்ல்மார்க்ஸ் லெனின் மாபெரும் உலக புரட்சியாளர்கள் நல்ல நண்பன் கிடைத்ததனாலேயே உயர்ந்த நிலையை அடைந்தனர். நமது பெற்றோரையும் உடன் பிறந்தோரையும் நம்மால் தீர்மானிக்க முடியாது ஆனால் நண்பன் யார் என்பதை தீர்மானிக்க முடியும். ஒரு சிறந்த நண்பன் தனது நண்பனை தீய வழியில் செல்ல விடாது அவனை தன்னோடு இணைத்து உயர்ந்த நிலையை அடையச் செய்வான். நண்பன் எப்போதும் தனது நண்பனுக்கு தீங்கு விளைவிக்க எண்ண மாட்டான். நல்ல நண்பர்கள் கிடைப்பதை பொறுத்தே எமது வாழ்க்கை அமைகிறது. தீய நண்பர்களுடன் சேர்வதன் மூலம் தீய செயல்கள் தான் அதிகரித்து செல்கிறது.

நட்பு என்றுமே பிரியாததும் அழியாததுமான வரம் ஆகும். நாம் அனைவருடனும் நட்பாக பழகவேண்டும். நண்பன் என்பவன் எமது உணர்வுகளை புரிந்து கொண்டு எம் துக்கங்களிலும், சுகங்களிலும் பங்கு கொள்பவன். உலகில் உள்ள மனிதர்களில் நண்பர் இல்லாத மனிதன் எவருமே கிடையாது.

சிறந்த நண்பர்களுக்கு உதாரணமாக கண்ணனை குசேலரையும் கூறலாம். இருவரும் ஒரு இடத்தில் ஒன்றாகப் படித்து நண்பர்களாக வாழ்ந்தவர்கள். ஒரு நிலை வாழ்க்கை முடிந்தாலும் அவர்களது மனதில் இருந்த நட்பு அழியாமலே இருந்தது. குசேலர வறுமையின் போது குசேலர் கண்ணனிடம் எதுவும் கேட்காத போதும் கண்ணன் குறிப்பறிந்து உதவி செய்தான். அது தான் சிறந்த நட்பு. ஆகவே நாமும் எமது நண்பனுக்கு உதவி தேவைப்படு சந்தர்ப்பங்களில் குறிப்பறிந்து உதவ வேண்டும்.

ஒவ்வொரு நண்பனையும் நாம் கடவுள் போல நினைக்க வேண்டும். அவனை கேலி செய்யக் கூடாது. நட்பு என்பது காற்றைப் போல் எல்லா இடத்திலும் நிறைந்து இருக்கும் நட்பு உன்னதமானது. இறைவன் தந்த கொடையே நட்பாகும். அதனை மதித்து கௌரவித்து எமது நண்பர்களுக்கு உண்மையான நட்பைப் பகிர்ந்து கொள்வோம்.


ஆபத்தில் உதவுபவனே
சிறந்த நண்பனாவான்.




# பல சவால்களை எதிர்கொள்வோம்

காவிரா

நாம் எமது வாழ்வில் பல பல சவால்களை வெற்றிகொள்கின்றோம் எமது வாழ்வில் இலட்சியத்தை அடைய வேண்டுமானால் எமக்கு ஏற்படும். தடைகளை எதிர்கொள்ளவேண்டும். எமது குடும்பப் பிரச்சினையால் இலட்சியத்தை அடைய முடியாது. இதனால் மனம் அமைதி இல்லாமையால் எமக்கு பாதிப்பு ஏற்படும். சிறுவர்களாகிய எமக்கு பல சவால்கள் ஏற்படுகின்றது. அவையாவன சினிமா பார்த்தல், தொலைக் காட்சி பார்த்தல், கணனி மூலம் இணையத்தில் பல சிறுவர்களுக்குப் பாதிப்புத் தரக்கூடிய நிகழ்ச்சிகளை பார்த்தல் என்பன இன்றைய காலத்தின் ஏற்படும் சவால்களாகும். இவ்வாறான பாதிப்புக்கள் மாணவர்களை வந்து சேராமல் பார்த்துக் கொள்வதற்கு ஆசிரியர், பெற்றோர், பெரியோர் என்பவர்கள் படாதபாடு படுகின்றனர். சிறுவயதில் பல சவால்களை எதிர்கொண்டு படித்தால்தான் நாம் பெரியவர்களாக நாட்டிற்கு ஒரு நற்பிரஜையாக வரமுடியும். ஆகவே ஆசிரியர், பெற்றோர், பெரியோரின் சொற்கேட்டு சவால்களை எதிர் கொண்டு அவர்களின் ஆசியுடன் நாம் எமது இலட்சியத்தை அடைவோமாக.



# நலம் தரும் நட்பு




அன்பான நண்பர்களே!
மாறிவரும் உலகில் வாழ்வாங்கு வாழ
இன மத பேதமின்றி ஒற்றுமையாய்
வாழ நட்பு கொள்வோம்.

King like gold ship
Queen like Silver ship
I like One ship
That is friendship

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
ஒற்றுமையே பலம்

# சகபாடிகளுடனான சாதனைகளை நிலை நாட்டுவோம்!

"சாதனை மிகுந்தவொரு சமுதாயத்தினைக் கட்டியெழுப்பச் சகபாடிகளே துணை நிற்கின்றனர்."



சகபாடிகள் துணை இருந்தால் ஒரு சாதனை மிகுந்த உலகத்தையே வென்றிட முடியும்


- சகபாடிகளினாலேயே சாதனை மிக்கவொரு சமூகம் உருவாக முடியும்


- சாதனைக்கு இலக்கணம் நல்வழிகாட்டும் நல்ல நண்பனாகும்

- சாதனை மிக்க சமூகத்தினால் ஒரு சாதனை மிக்க உலகத்தைப் படைக்க முடியும்.

"எனவே பிள்ளைகளே சாதனையை நிலைநாட்டச் சகபாடிகளை அணுகுங்கள்"

[illegible] (சித்திரம்)





# Friend ship.



"A friend in need is a friend indeed" This is the preverbs that reveals what friendship is. A true friend could be identified by your hard times.

Now a days we make lot of friends talk with them eat with them and then we part and forgot. That kind of friendship never lasts forever Remember "Old is gold" Always keep your old friends in touch and make you new friends

Good friends friendship seems to be like reading good books. That will be sweet. F means fast, R means relationship. I for identify. e for eternal and d D for Dear, N for noble. which tells this world is sweet because of lot of friends.

end

- R. Sumiththa -

## சமாதானம் நிலைக்க நட்பு...

I ஆண்டு பலவாக ஆயுதங்கள் ஏந்தி
நீண்ட போர் செய்த நிலைமாறி
ஈண்டு சமாதானம் என்று பலர் பேசியதால்
இயல்பு நிலை தோன்றிய வேளை இது

II சொந்த மண்ணிலேயே எம்மைக்
கொன்றவர்கள் தனை நட்பால் வென்று
இனவெறியை, மதவெறியை இன்சொலால் அடக்கி
புது உலகைத் தோற்றிடுவோம்

III கூறுபட நின்று குரோதம் மிகக் கொண்டு
கேடுபல செய்தோர் இன்றுதம்
வேறுபாடு மறந்து எமை நாடும்
விந்தைதனை ஏன் சொல்வோம்?

IV புரிந்துணர்வு ஒப்பந்தம் பொருந்தியதால் முன்பு
வர அஞ்சி நின்றோர் வந்து கடைப்பரப்பச்
சிரமத்தின் மத்தியில் சேர்த்த செல்வமெல்லாம்
தரமற்ற பொருளாய் தரமிழந்து நிற்பதும் ஏன்?

V சொந்த மண்ணில் உலவச் சோதனைகள்
இந்த வேதனைகள் இனியெமக்கு வேண்டாம்
சொந்தபந்தம் சேர்ந்து சுதந்திரமாய் வாழ்வதற்கு.
நட்பு எனும் வரம் வேண்டும் இறைவா!


-முற்றும்- -பு. சுமித்தா-

# தோழியின் பாதையில் (சிறுகதை)

வயல்வெளிகளால் சூழப்பட்ட மருதம் கிராமம் இயற்கையின் அழகினால் மிளிர்ந்து கொண்டிருந்தது. தென்றல் காற்று சில்லென்று வீசிக் கொண்டிருந்தது. அந்தக் கிராமத்தில் தான் நிசா தன் குடும்பத்தினருடன் வசித்து வந்தாள். நிசாவின் தந்தை ஒரு விவசாயி. தனது கடின உழைப்பால் தன் குடும்பத்தை பராமரித்து வந்தார். நிசாவின் தாய் அவள் பிறந்தவுடனேயே வைத்தியசாலையில் இறந்து விட்டார். நிசாவின் தந்தை அவளை ஒரு குறையுமில்லாமல் அன்புடன் வளர்த்து வந்தார்.

நிசா ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது அவளுக்கு நிலா எனும் உயிர்த்தோழி கடவுள் கொடுத்த வரத்தின் காரணமாக வரப்பிரசாதமாகக் கிடைத்தாள். நிலாவின் தந்தை ஒரு பொறியியலாளர். அவளது தாய் ஒரு ஆசிரியை. நிலாவிற்கு ஒரு அண்ணா இருந்தார். நிலாவின் அண்ணாவான சீதன் தனது தங்கையின் மேல் வைத்திருக்கும் பாசத்தைவிட நிலாவின் தோழியான நிசாவின் மீது அதிக பாசம் வைத்திருந்தான். நிலாவின் பெற்றோர் நிசாவை தமது பிள்ளை போல் கவனித்து வந்தார்கள்.

சில வருடங்கள் உருண்டோடின. நிலாவும் நிசாவும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் படித்துக் கொண்டிருந்தனர். ஒரு நாள் நிசா பாடசாலை விட்டு வீட்டிற்கு வரும் போது அவர்களது வீட்டு முற்றத்தில் மக்கள் கூட்டமாக நிற்பதைக் கண்டு பதற்றத்துடன் ஓடி வந்தாள். அங்கு கூடி நின்றவர்களை நெருங்கிய போது ஒருவர் "பிள்ளை உங்கட அப்பா வயலில வேலை செய்யும் போது காலில பாம்பு கடிச்சுப் போட்டுது வாயால நுரை தள்ளுது. உன்னைத் தான் கேக்கிறார் போய் என்னண்டு கேள் பிள்ளை" என்று அவர் கூறி முடிக்கமுன் அவள் ஓடிச்சென்று தந்தையின் அருகில் நின்றாள்.



அவள் தன் அருகில் நின்று திரும்பிப் பார்த்த போது அவளது உயிர்த்தோழியான நிலா அவளது தந்தையின் அருகில் நின்று விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். நிசாவின் தந்தை நிலாவையும் நிசாவையும் தன் அருகே வருமாறு கை காட்டி அழைத்தார். அவர் நிலாவைப் பார்த்து "பிள்ளை நான் நீண்ட நாளைக்கு இருக்க மாட்டன். நீதான் என்ர பிள்ளையை நல்லா பார்க்க வேணும். அவளை ஒரு டொக்டராக பார்க்கவேணும் என்டு ஆசைப்பட்டனான். நீதான் என்ர ஆசையை நிறைவேற்ற உதவி செய்யணும்" என்று கூறிமுடிக்கமுன் அவரது உயிர் அவரது உடலைவிட்டுப் பிரிந்துவிட்டது.

தனது தந்தையின் நிலையைப் பார்த்த நிசா ஓவென்று கதறி அழுதாள். இதனைக் கண்ட நிலாவின் பெற்றோர் நிசாவை அன்புடன் அரவணைத்து "நிசா இனி உனக்கு நாங்கதான் அம்மாவும் அப்பாவும். நீ உன்ர அப்பான்ர ஆசையை நிறைவேற்றவேணும். உனக்கு உன்ர நிலா உதவியா இருப்பா" என்று அவர்கள் கூறும்போது நிசா அவர்களைப் பார்த்து "நான் என்ர அப்பாவின் ஆசையை நிறைவேற்றுவேன்" என்று அழுதவண்ணம் கூறினாள்.

நிசாவின் தந்தையின் இறுதிச் சடங்குகளை நிலாவின் பெற்றோர் செய்து முடித்தனர். அவரின் இறுதிச் சடங்குகள் முடிந்தவுடன் நிசாவை தமது வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். அவளை தமது பிள்ளைபோல வளர்த்து வந்தார்கள். நிசாவும் கவலைகளை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு தனது முழுக் கவனத்தையும் படிப்பில் செலுத்தினாள்.

அவளது படிப்புக்கு வேண்டிய அனைத்துச் செலவுகளையும் அவளது உயிர்த்தோழியின் பெற்றோர் கவனித்து வந்தார்கள். கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் நிசாவும் நிலாவும் 9A தரச்சித்தி பெற்று உயர்தரக் கல்வியை விஞ்ஞானப்பிரிவில் தொடர்ந்தனர்.


காலங்கள் உருண்டோடின. உயர்தரப் பரீட்சையும் நெருங்கியது இருவரும் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுகளுக்காக காத்துக் கொண்டிருந்தனர். சில மாதங்கள் சென்றன. பரீட்சை முடிவுகள் வெளியாகின. இருவரும் 3A தரச் சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகினர்.

இதைக் கண்ட பெற்றோர் அளவற்ற ஆனந்தமடைந்தனர். பல்கலைக் கழக படிப்பிற்குத் தேவையான செலவினைப் பெற்றோர் செய்தனர். அன்றைய நாள் அவர்களது ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஏனென்றால் அன்று அவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடைபெற இருந்தது. நிலாவினதும் நிராவினதும் பட்டமளிப்பு விழாவிற்காக பெற்றோர் இருவரையும் அழைத்துக் கொண்டு காரில் சென்று கொண்டிருந்தனர்.

எல்லோரும் சென்று கொண்டிருந்த போது எதிரே வேகமாக வந்து கொண்டிருந்த பாரஊர்தி அவர்களது காருடன் மோதியது. நிராவின் உயிர்த்தோழியான நிலா பலத்த காயங்களுக்குள்ளாகி இரத்தவெள்ளமாக காட்சியளித்தாள். அப்போது நிலா நிராவைப் பார்த்து "நிரா நீ உன்ர அப்பான்ர ஆசையை நிறைவேற்ற வேணும் அதுதான் என்ர ஆசையும்" என்று கூறிமுடிக்குமுன் அவளது உயிர் அவளது உடலை விட்டு அவ்விடத்திலேயே பிரிந்துவிட்டது.

நிரா நிலாவின் பெற்றோருக்கு ஆறுதல் கூறி தனது மனதையும் திடப்படுத்திக் கொண்டாள். நிலாவின் கனவை நனவாக்க வேண்டும் என்ற மன உறுதியுடன் மருத்துவராக வெளியேறி, அவளது அப்பாவின் பெயராலும் தனது உயிர்த் தோழியின் பெயரிலும் வைத்தியசாலை கட்டினாள். மக்களுக்கு இலவசமாக மருத்துவ சேவை வழங்கினாள். தனது அப்பாவினதும் உயிர்த்தோழியினதும் கனவை நனவாக்கிய திருப்தியுடன் மக்களுக்கு சேவை செய்வதற்காக தனது வைத்தியசாலையை நோக்கி நடைபோட்டாள்.

ஆக்கம் :- த. தர்சனா


V.H.G.C
உன்னைய
நீ
அறிவாய்

சகபாடிகளும் சாதனைகளும்.

# சக பாடிகளுடன் சாதனை புரிய விரும்புகிறீர்களா?




அன்பான சிநேகிதனை
ஆபத்தில் அறியலாம்

மனிதர்கள் வாழ்க்கையைப் பேணி அமைவதற்கும்
சிறந்த சாதனை புரிய உதவுவது
சகபாடிகளே காரணமானவன்.

* நல்ல நண்பர் வாழ்வில் நற்குணம் தோன்றும்.
* சகபாடியின் சாதனை ஒரு மனிதனை நல்வழிக்கு இட்டுச் செல்லும்.
* நல்ல நண்பனை அவர்களின் செயல் மூலம் அறியலாம்
* நல்ல சகபாடியை தேர்ந்தெடுத்து சாதனை புரியுங்கள்.

என்றும் சாதனை நினைவில்!

சாதனை செய் உயர் நிலையில்.

சகபாடியின் சாதனையை
என்றும்
உயர்
நினைவில்.

மாணவர் அகிலம்.



# நன்றி



# சிந்தனை துளிகள்

* எறும்புகள் சேர்ந்தால் கூட குப்பையை பெருக்கி சுத்தம் செய்யும். உன்னைப்போல் ஆயிரம்பேர் இணைந்து இருந்தால் இந்த உலகில் உள்ள இழிசெயல்களை இல்லாமல் செய்து விடலாம்.

* [illegible]

* [illegible]

* நாம் என்ற சொல் நாவில் பிறக்கிறது. நம்பிக்கை என்ற சொல் நெஞ்சில் பிறக்கிறது.

* நரகம் என்பது வேறு எங்குமில்லை. நல்ல சிந்தனை இல்லாத இடத்தில் தான் இருக்கிறது.

* Future ஐ எண்ணி Present ஐ மறந்து விடாதே.

* கை, கால் இருந்தும் சிந்திக்கத் தெரியாதவனே உண்மையான ஊனமுற்றவன் ஆவான்.

  நீ யாரிடமும் உன்னை ஒப்பிடாதே. உலகில் நீயே தனித்துவமானவன் என எண்ணிக் கொள்.

* உறவும் என்பது உள் உடலில் இல்லை மனதில் தான் இருக்கிறது.



## உன்னை நீயே சீர்திருத்திப்பார் உயர்வு உன் கையில்

மாலையிலே மனித உள்ளங்களை மென்மையாய் மலர்களின் வாசனைத் தென்றலுடன் புத்துணர்வை ஏற்படுத்தும் அவ் வேளை உலகிற்கு ஒளியை வழங்கும் மதியின் அழகை இரசிக்காது தனது வெறிப்பான பார்வையை அதில் செலுத்தியபடி நின்றிருந்தான் சேகர்.

சேகர், சேகர வந்து சாப்பிட்டுப் போ நேரமாச்சு என்ற மீனாட்சியின் குரல் அவனது செவிகளைத் தழுவ மனமற்று ஏனோவு சாப்பிட்டு விட்டு யாரையும் முகங்கொடுத்துப் பார்க்காது தனது படுக்கைக்குச் சென்றான். படுத்தவனுக்குத் தூக்கம் வரவில்லை அன்று சிவனேசன் வாத்தியார் கூறிய சொற்கள் அவனை முட்களாய் குத்தின.

பசுமை பொழியும் பூம்புகார் என்ற கிராமத்திலே குடிசைகளே நிறைந்து காணப்பட்டன பச்சைப்பசேலென இருக்கும் நெற் கதிர்களின் வயல்களின் நடுவில் வைக்கோலால் ஆன கூடாரங்கள் அதில் முதற் தெருவிலமைந்த குடிசை சேகரினதாகும்.

சேகரும் அவனது தங்கையும், கால் முடமான அண்ணனும் அவர்களின் தாய்தந்தையருக்கு மூன்று பிள்ளைகள் கஷ்டத்திலே வாழும் அவர்களிற்குத் தீனியாய் அமைந்தவர் சேகரின் தந்தை வேலாயுதம். வேலாயுதமும், மீனாட்சியும் பிள்ளைகளை நல்லவர்களாய் வளர்த்தனர். ஆனால் சேகர் அப்படி இருக்கவில்லை கல்வியில் ஆர்வமிருந்தும் தீய நண்பர்களின் உறவால் தனது கல்வியை இடையில் இழந்து விட்டான். இந்த சமயத்தில் சேகரின் தந்தை வேலாயுதமும் இறந்து விட்டார்.

தந்தை இறந்த பின்னர் தாய் மீனாட்சியும் படுத்த படுக்கையாகி விட்டார். குடும்பத்தின் முழுப் பொறுப்புகளும் அவனது கையில் வந்து விழுந்தன. தனது தாயின் துயரத்தையும் தங்கையின் கல்வியையும் கால்முடமான அண்ணனின் மருத்துவ செலவுகளையும் எண்ணி குடும்பத்திற்கு உழைக்க நினைத்தான். ஆனால் அவனது எண்ணம் நிறைவேறவில்லை. இடையில் கல்வியை இழந்து விட்டதால் அவனிற்கு ஏற்ற வேலை கிடைக்கவில்லை. கிராமத்திலும் அவனை நம்பி வேலை கொடுக்கவில்லை அப்போதுதான் தனது நிலையை எண்ணிக் கவலையடைந்தான் கண்ணீர் அவன் கண்களை மூடி மறைத்தது.

அண்ணனின் மருத்துவச் செலவிற்குப் பணமில்லை [illegible] துயரத்தைப் பார்த்து கவலையடைய முடிந்ததே தவிர உதவ முடியவில்லை.

அயலில் உதவி கேட்டாலும் அவனை நம்பி யாரும் கடன் உதவி செய்ய முன்வரவில்லை மறுத்துவிட்டார்கள்.

இதனால் சேகர் தனது நண்பர்களோடு தவறான முறையில் பணம் சம்பாதிக்க முயன்றான். அன்று இரவு சேகர் தனது நண்பர்களோடு பண்ணையார் வீட்டில் திருட எண்ணினார்கள். இரவு திருட முயற்சித்த போது சிவனேசன் வாத்தியாரின் கண்களில் அகப்பட்டுக் கொண்டான் சேகர்.

சிவனேசன் வாத்தியார் அக்கிராமத்திலுள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர். மிகவும் இரக்கமுடையவர். உதவி செய்யும் மனம் உடையவர். சேகரை சிறு வயதிலிருந்தே சிவனேசன் வாத்தியாருக்குத் தெரியும். சேகரின் குடும்பநிலையை எண்ணி அவனிற்குச் சிறு வயதிலே இலவசமாய் மாலையிலே கற்பிப்பவர். அன்று சேகரை அந்த நிலையில் பார்த்து அதிர்ச்சியடைந்தார். அவனது குடும்பநிலையை எண்ணி மிகவும் கவலைப்பட்டார்.

அவர் சேகரைப் பார்த்து "உனது குடும்ப நிலையை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. பணம் இல்லை என்றால் திருடுவாயா? திருடினால் பாவம் கிடைக்கும். முதலில் உன்னை நீ மாற்று. தீய நண்பர்களோடு கூட்டுசேராதே. அவர்கள் உனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து விடுவார்கள். வேலை கிடைக்கவில்லை என்று உன் நேரத்தையும் காலத்தையும் வீணடிக்காதே. உனக்கு என்று ஒரு எதிர்காலம் உண்டு. உனது தந்தைக்குச் சொந்தமான நிலத்திலே விவசாயம் செய்து கொள். இப்படி தவறான முறையில் பணம் சம்பாதித்து என்ன பிரயோசனம். நீ இவ்வாறு திருடன் என்று தெரிந்தால் உன் குடும்பத்தில் உள்ளவர்கள் உன்னை வெறுக்கமாட்டார்களா? நீயே யோசித்துப் பார்" என்று பலவாறு அறிவுரைகள் கூறினார்.

பாயில் இருந்து புரண்டு படுத்தவன் வாத்தியார் கூறியது போல நான் என்னை மாற்றிக்கொள்ள வேண்டும். நான் தான் கல்வியை இடையில் நிறுத்தி விட்டேன். ஆனால் எனது தங்கையை மிக நன்றாகப் படிப்பிக்க வேண்டும். எனது அண்ணனையும் குணமுடையச் செய்ய வேண்டும். எனது குடும்பத்தை நல்ல, சிறந்த முறையில் தான் உருவாக்க வேண்டும் என நினைத்துக் கண் அயர்ந்து விட்டான்.

கதிரவன் கதிர்க்கரங்களைப் பூமியிலே பதிக்கவும் இயற்கையின் அலாரத்தால் கண் விழித்தான் சேகர். அவனது மன விடியல் அது அவன் எழுந்து தனது கடமைகளை முடித்து வயலிற்குச் செல்ல ஆயத்தமானான். தாயின் முகத்தில் சந்தோசம் தெரிந்தது.

"அம்மா நான் போயிற்று வாறன்" என்று தாய்க்குக் கூறிவிட்டுத் தாயிடம் ஆசீர்வாதமும் பெற்று விட்டு வயலிற்குச் சென்றான். சேகர் இரவு பகல் என்று பாராது அயராது உழைத்தான். பாடுபட்டு உழைத்ததற்குப் பலனில்லாமல் போகுமா? அவன் விவசாயத்தில் முன் வந்து தற்போது பெரிய தொழிலதிபராக மாறிவிட்டான். அவனிற்கு உதவி செய்ய மறுத்தவர்கள் தற்போது அவனிடம் வேலை கேட்டு நின்றனர். சேகரது வாழ்வு மலர்ந்தது. அவன் நினைத்தபடி தனது தங்கையைச் சிறந்த முறையில் படிப்பித்தான். அத்தோடு தனது அன்பு அண்ணனையும் குணமடையச் செய்தான்.

"உன்னை நீயே சீர்திருத்திப்பார் உயர்வு உன் கையில்" என்று மனதில் கொண்டு பெருமையோடு தனது வாழ்க்கையின் கதவைத் திறந்தான் சேகர். அவனது மனத்திரையில் சிவனேசன் வாத்தியாரின் உருவம் தோன்றி மறைந்தது.